

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2022

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

2023

இலங்கை, பேராதனை விவசாயத் திணைக்கள முன்னேற்ற கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவினால் இவ்வறிக்கை தொகுக்கப்பட்டு விவசாயப்பிரசுரப்பிரிவினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

அனைத்து உரிமைகளையும் கொண்டது. சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர, ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டாது. இலங்கை விவசாயத் திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்காக இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. இந்த பதிப்புரிமையானது விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

# 2022ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**நிறுவனத்தின் பெயர் : விவசாயத் திணைக்களம்**

**செலவினத் தலைப்பு இல:285**

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு ..... 1

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் ..... 11

அத்தியாயம் 03 - 2022 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை..... 24

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் ..... 31

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை ..... 42

அத்தியாயம் 06 - மனித வளங்களின் விபரம் ..... 43

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை ..... 44

இணைப்புகள் ..... 45

# அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

விவசாயத் திணைக்களமானது விவசாய அமைச்சின் கீழ் இயங்கும், உயர் கல்வித் தகமைகளுடன்கூடிய தொழில் வல்லுநர்களையும், தொழில்நுட்ப அலுவலர்களையும், தீவெங்கிலும் அமைந்துள்ள அலகுகளின் வலையமைப்பையும் கொண்ட பெரிய அரச திணைக்களங்களில் ஒன்றாகும்.

விவசாயியின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்குப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றிற்காக பசுமை விவசாயக் கொள்கையுடனான உணவுப் பயிர்கள் துறையில் விளைதிறன் மற்றும் உற்பத்தி என்பவற்றினை நிலையான வகையில் விருத்தி செய்தல் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் இலக்குகள் முன்னோக்கப்படுகின்றன.

விவசாயத் திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகளில்ஆராய்ச்சி, விரிவாக்கம், கல்வி,விதை, நடுகைப்பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றோடு, தாவரத் தடுப்புக்காப்பு, மண் பாதுகாப்பு, பீடை நாசினிகள்கட்டுப்பாடு ஆகிய ஒழுங்காற்றல் சேவைகளும் உள்ளடங்கியுள்ளன.

விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவ கட்டமைப்பில் நெற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நான்கு பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களும்; விதை அத்தாட்சிப்படுத்தலிற்கும், பயிர் பாதுகாப்பிற்குமான நிலையம், விதை, நடுகைப்பொருட்களிற்கான அபிவிருத்தி நிலையம், விரிவாக்கத்திற்கும், பயிற்சிக்குமான நிலையம், விவசாயத் தகவல்களிற்கும், தொடர்பாடல்களிற்குமான தேசிய நிலையம், சமூகப் பொருளியல் திட்டமிடல் நிலையம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் ஆகிய ஆறு தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நிலையங்களும்; முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகு, நிர்வாகப் பிரிவு, பொறியியல் பிரிவு, நிதிப் பிரிவு ஆகிய நான்கு துணைச் சேவை அலகுகளும் அடங்கியுள்ளன.

## 1.2 நிறுவனத்தின் தொலை இலட்சியம், பணிக்கூற்று, குறிக்கோள்கள்

**தொலை இலட்சியம்:**தேசத்தின் சௌபாக்கியத்திற்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்.

**பணிக்கூற்று:**மேம்படுத்தப்பட்டவிவசாயத் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்து அவற்றை பரப்புவதுடன் விவசாயிகளை மையப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் தேசத்தின் உணவு, போசணைப் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய, நிலைபேறான, சமத்துவமான விவசாய அபிவிருத்தியை அடைதல்.

**குறிக்கோள்கள்:**


- உணவுப் பயிர்ச் செய்கைக்கான உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
- நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான கமத்தொழிலினை உறுதிப்படுத்தல்.
- நிலைபேறான பயிர்ச் செய்கையை உறுதிப்படுத்தல்.
- தொழிலாளர், காணி ஆகியவற்றின் பயன்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல்.
- விவசாயத் துறையில் அனைத்து பங்குதாரர்களையும் வலிமைப்படுத்தல்.
- விவசாயத் துறையில் மனிதவள ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- தரமான விதை, நடுகைப் பொருட்கள் பங்குதாரர்களிற்குக் கிடைக்கும் தன்மையை உறுதி செய்தல்.
- நில, நீர் வளங்களை உகந்த அளவில் பயன்படுத்தல்.
- திட்டமிடல், கொள்கைத் தீர்மானங்கள், கொள்கை வழிகாட்டல் ஆகியவற்றிற்கு உதவுதல்.
- விதை, நடுகைப் பொருட்கள், விவசாய உற்பத்திகளின் தர நியமங்களை உறுதி செய்தல்.

- நாட்டின் தாவர இனங்களை தீங்கு விளைவிக்கும்அந்நிய இனங்களிலிருந்து பாதுகாத்தல்.
- விவசாய உற்பத்திகளுக்கான அந்நியச் செலாவணியை அதிகரிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள், தாவர உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான வசதிகளை செய்து கொடுத்தல்.
- சுற்றாடலையும், பொது மக்களையும் பீடைநாசினிகளின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.
- தாவரக் கரு மூளவளங்களின் நிலைபேறான பயன்பாட்டினை உறுதி செய்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

- காய்கறிகள்,பழங்கள், நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்தித் தோற்றுவாய்களை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு விவசாய ஆராய்ச்சியின் ஊடாக பொருத்தமான புதிய இனங்கள் மற்றும் விவசாயத் தொழிநுட்பங்களைத் தோற்றுவித்தல்
- பல்வேறு விவசாய விரிவாக்கல் வழிமுறைகளைப் பயன்படுத்தி விருத்தியடைந்த விவசாயத் தொழிநுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்.
- காய்கறிகள்,பழங்கள், நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்கள் உட்பட உணவுப் பயிர்களின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்தல், அத்தாட்சிப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் என்பவற்றின் ஊடாக தரப்பினர்களுக்கு தரமான நிலையில் உள்ள விதைகள் எளிதாகக் கிடைக்கும் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- நிலையான வகையில் பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பான உறுதிப்படுத்துலுக்காக பயிர் மரபணு வளங்களைப் பாதுகாத்தல்.
- உற்பத்தியின் விளைதிறனை அதிகரிப்பதற்காக காணிகள் மற்றும் நீர் வளங்களை சிறந்த மட்டத்தில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.
- தேசிய தாவரங்களைப் பாதிக்கும் வெளிநாட்டு இனங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- விவசாய உற்பத்திகளின் ஊடாக அந்நியச் செலாவணியினை அதிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- பீடைநாசினிகளின் பாதகமான தாக்கங்களில் இருந்து பொதுமக்களையும் மற்றும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மண் பாதுகாப்புச் சட்டம், பயிர்ப் பாதுகாப்புச் சட்டம், மரங்கள் வெட்டுவதனைக் கட்டுப்படுத்தும் சட்டம், பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் விதைகள் சட்டம் என்பவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான விவசாயத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விவசாயத் துறைக்கு சேவைகளை வழங்குவதற்குத் தேவையான மூன்றாம் நிலை தேர்ச்சியினைக் கொண்ட நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலான மனித வளத்தைத் தோற்றுவிப்பதற்காக விவசாயக் கல்வியின் ஊடாக விவசாயம் தொடர்பான தேசிய தொழில் சார் பயிற்சிகள் (NVQ) 5 மற்றும் 6 மட்டத்திலான டிப்ளோமாப் பாடநெறிகளைப் பேணி வருதல், விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்கு அவசியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

**1.4 நிறுவன விளக்கப்படம் - விவசாயத் திணைக்களம்**




(நெ.ஆ.அ..நி) -நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(வ.ப.ஆ.அ.நி.) -வயற்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம்
(பூ.ப.ஆ.அ.நி) -பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(ப.ஆ.அ.நி.) -பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
(இ.வ.மு.நி.) -இயற்கை வள முகாமைத்துவ நிலையம்
(ச.பொ.தி.நி.) -சமூகபொருளியல், திட்டமிடல் நிலையம்
(வி.ந.பொ.அ.நி) -விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம்
(வி.அ.தா.பா.நி) -விதை அத்தாட்சிப்படுத்தல் தாவரப்பாதுகாப்பு நிலையம்
(வி.ப.நி) -விரிவாக்கல் பயிற்சி நிலையம்
(தே.வி..த.தொ.நி.) -தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம்
(மு.க.ம.அ) -முன்னேற்ற கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகு

**1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்**

1.5.1 விவசாயப் பணிப்பாளர் நாயக அலுவலகம்

1.5.2 மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயக (ஆராய்ச்சி) அலுவலகம் –பேராதெனிய

1.5.3 மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயக (அபிவிருத்தி) அலுவலகம் –பேராதெனிய

1.5.4 மேலதிக பணிப்பாளர் நாயக (நிருவாகம்) அலுவலகம் –பேராதெனிய

1.5.5 பிரதான நிதி உத்தியோகத்தர் அலுவலகம் - பேராதெனிய

1.5.6 நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்–பத்தலகொடை

- 1.5.6.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்- போம்புவெல
- 1.5.6.2 நெல் ஆராய்ச்சி நிலையம் -அம்பலாந்தொட்டை.
- 1.5.6.3 நெல் ஆராய்ச்சி நிலையம் -பெந்தோட்டை
- 1.5.6.4 நெல் ஆராய்ச்சி நிலையம்-லபுதுவ
- 1.5.6.5 நெல் ஆராய்ச்சி நிலையம் -சம்மாந்துறை
- 1.5.6.6 நெல் ஆராய்ச்சி நிலையம் -பரந்தன்
- 1.5.6.7 நெல் ஆராய்ச்சி நிலையம் -முருங்கன்

1.5.7 வயற்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - மஹா இலுப்பல்லம

- 1.5.7.1 அவரைத் தானிய, எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் -அங்குணகொலபெலஸ்ஸ
- 1.5.7.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - அரலகன்வில
- 1.5.7.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் -கிளிநொச்சி
- 1.5.7.4 பிரதேச விவசாய ஆராய்ச்சி நிலையம் - கரதியனாறு
- 1.5.7.5 இசைவாக்க ஆராய்ச்சி நிலையம்-வவுனியா
- 1.5.7.6 விவசாய ஆராய்ச்சி நிலையம்-திருநெல்வேலி
- 1.5.7.7 விவசாய ஆராய்ச்சி நிலையம்- தெலிஜ்ஜவில
- 1.5.7.8 விவசாய ஆராய்ச்சி நிலையம் - வீரவில
- 1.5.7.9 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் - மஹாஇலுப்பள்ளம

1.5.8 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - கன்னொறுவை

- 1.5.8.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பண்டாரவளை
- 1.5.8.2 விவசாய ஆராய்ச்சி நிலையம் - சீதா எலிய
- 1.5.8.3 விவசாய ஆராய்ச்சி நிலையம்-கிராந்துருகோட்டை
- 1.5.8.4 உணவு ஆராய்ச்சி பிரிவு– கண்ணொறுவ
- 1.5.8.5 விவசாய ஆராய்ச்சி நிலையம்–கற்பிட்டி
- 1.5.8.6 பூங்கனியியல் ஆராய்ச்சி பண்ணை –கண்னொறுவை
- 1.5.8.7 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு-வாகொல்ல
- 1.5.8.8 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு - திப்பட்டுமுல்ல
- 1.5.8.9 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு -வாரியபொல
- 1.5.8.10 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு -தப்போவ

1.5.9 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - ஹொரன

- 1.5.9.1 நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்- மாகந்துர
- 1.5.9.2 பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் - கண்ணொறுவ
- 1.5.9.3 தாவர வைரசு சுட்டியிடல் நிலையம் - ஹோமாகம
- 1.5.9.4 விவசாய ஆராய்ச்சி நிலையம்-மதுருகெட்டிய
- 1.5.9.5 விவசாய ஆராய்ச்சி நிலையம்-முதுகண்டிய

1.5.9.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் - இரஹங்கல

1.5.9.7 பழப் பயிர் ஆராய்ச்சி பண்ணை - எரமிணிகொல்லை

1.5.9.8 சித்திரசு ஆராய்ச்சி நிலையம்-பிபிலை

1.5.9.9 தேசிய பழ வர்க்க பாதுகாப்பு நிலையம் - குண்டசாலை

1.5.10 இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் – பேராதனை

1.5.10.1 இயற்கைவளங்கள் முகாமைத்துவ நிலையம் உப அலகு – குண்டசாலை

1.5.10.2 இயற்கை வள முகாமைத்துவ மற்றும் மண் பாதுகாப்பு மாதிரி மையம் - குண்டசாலை

1.5.11 சமூக பொருளியல், திட்டமிடல் நிலையம்-பேராதனை

1.5.12 விரிவாக்கம், பயிற்சி நிலையம் - பேராதனை

1.5.12.1 சேவைக்கால பயிற்சி நிலையம்–அங்குணகொலபெலஸ்ஸ

1.5.12.2 சேவைக்கால பயிற்சி நிலையம்–கன்னொறுவ

1.5.12.3 சேவைக்கால பயிற்சி நிலையம்–ஹன்சயாபாலம

1.5.12.4 பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் –அநுராதபுரம்

1.5.12.5 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்– அட்டாளைச்சேனை

1.5.12.6 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – அம்பாறை

1.5.12.7 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – பொலன்னறுவ

1.5.12.8 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் –வீரவில

1.5.12.9 விவசாய பாடசாலை–அங்குணகொலபெலஸ்ஸ

1.5.12.10 விவசாய பாடசாலை- கரபிஞ்ச

1.5.12.11 விவசாய பாடசாலை–குண்டசாலை

1.5.12.12 விவசாய பாடசாலை–பெல்வெஹெர

1.5.12.13 விவசாய பாடசாலை–வவுனியா

1.5.12.14 விவசாய பாடசாலை–அநுராதபுரம்

1.5.12.15 விவசாய பாடசாலை–லபுதுவ

1.5.7.16 விவசாய பாடசாலை–பாலமுனை

1.5.12.17 விவசாய பாடசாலை–பரந்தன்

1.5.12.18 விவசாய பாடசாலை–வாரியப்பொல

1.5.12.19 விவசாய பாடசாலை–பிபிலை

1.5.12.20 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - அம்பாறை

1.5.12.21 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - அநுராதபுரம்

1.5.12.22 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - ஹம்பாந்தோட்டை

1.5.12.23 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - ஹசலக

1.5.12.24 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - மொனராகலை

1.5.12.25 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது - பொலன்னறுவ

1.5.12.26 தேனீ அபிவிருத்தி பிரிவு-பிந்துனுவெவ - பண்டாரவளை

1.5.12.27 இளம் விவசாயிகள் கழகம்–தலைமையகம் - பேராதனை

1.5.12.28 விவசாய வியாபார அபிவிருத்தி பிரிவு - கன்னொறுவை

1.5.12.29 பொருளாதார மத்திய நிலையம் - தம்புள்ளை

1.5.13 தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம் – கன்னொறுவை

1.5.13.1 விவசாய பிரசுரப் பிரிவு – கன்னொறுவ

1.5.13.2 பண்ணை ஒலிபரப்பு சேவை - கொழும்பு

1.5.13.3 பண்ணை ஒலிபரப்பு சேவை - கண்டி

1.5.13.4 பண்ணை ஒலிபரப்பு சேவை - அநுராதபுரம்

1.5.13.5 பண்ணை ஒலிபரப்பு சேவை - மாத்தறை

1.5.13.6 விவசாய வானொலி சேவை - திருநெல்வேலி

1.5.13.7 விவசாய தொழில்நுட்ப பூங்கா – கன்னொறுவ

1.5.13.8 விவசாய தொழில்நுட்ப பூங்கா – பட்ட அத

1.5.13.9 மத்திய விவசாய நூலகம் - கன்னொறுவை

1.5.13.10 சூழல் நேயம் விவசாய அலகு - தியகம

1.5.14 விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் – பேராதனை

1.5.14.1 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - அலுத்தரம

1.5.14.2 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – அம்பாறை

1.5.14.3 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பட்ட அத

1.5.14.4 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – நாராஹேன்பிடிய

1.5.14.5 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - கந்தளாய்

1.5.14.6 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் –கிளிநொச்சி

1.5.14.7 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – குண்டசாலை

1.5.14.8 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – மஹா இலுப்பள்ளம

1.5.14.9 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் –நிக்கவெரட்டிய

1.5.14.10 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – சீதாஎலிய

1.5.14.11 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பெல்வெஹெர

1.5.14.12 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பொலன்னறுவ

1.5.14.13 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - தெலிஜ்ஜவில

1.5.14.14 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - வவுனியா

1.5.14.15 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – கரடியனாறு

1.5.14.16 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – முருங்கன்

1.5.14.17 உதவி விவசாயப் பணிப்பாளர் (வி.ந.பொ) காரியாலயம் - யாழ்ப்பாணம்

1.5.14.18 அரச விதைப்பண்ணை – அலுத்தரம

1.5.14.19 அரச விதைப்பண்ணை – அம்பலாந்தோட்டை

1.5.14.20 அரச விதைப்பண்ணை – அம்பேபுஸ்ஸ

1.5.14.21 அரச விதைப்பண்ணை – மஹா இலுப்பல்லம

1.5.14.22 அரச விதைப்பண்ணை - கந்தளாய்

1.5.14.23 அரச விதைப்பண்ணை – மித்தெனிய

1.5.14.24 அரச விதைப்பண்ணை - பொலன்னறுவ

1.5.14.25 அரச விதைப்பண்ணை – மல்வத்த, அம்பாறை

1.5.14.26 அரச விதைப்பண்ணை - முருங்கன்

1.5.14.27 அரச விதைப்பண்ணை - கரடியனாறு

1.5.14.28 அரச விதைப்பண்ணை - பரந்தன்

1.5.14.29 அரச விதைப்பண்ணை – குண்டசாலை

1.5.14.30 அரச விதைப்பண்ணை - மீபிலிமான

1.5.14.31 அரச விதைப்பண்ணை - ரஹங்கல

1.5.14.32 அரச விதைப்பண்ணை – உடரதெல்ல

1.5.14.33 அரச விதைப்பண்ணை - சீதாஎலிய

1.5.14.34 அரச விதைப்பண்ணை – பட அத்த

1.5.14.35 அரச விதைப்பண்ணை – கந்தபொல

1.5.14.36 அரச விதைப்பண்ணை - பீதுருதாலகால

1.5.14.37 அரச விதைப்பண்ணை - வல்பிட

1.5.14.38 அரச விதைப்பண்ணை - உள்பதகம

1.5.14.39 அரச விதைப்பண்ணை – பண்டாரகம

1.5.14.40 அரச விதைப்பண்ணை - தெலிஜ்ஜவில

1.5.14.41 அரச விதைப்பண்ணை – பெல்வெஹெர

1.5.14.42 அரச விதைப்பண்ணை – இங்கினிமிடிய

1.5.14.43 அரச விதைப்பண்ணை - வீரபான

1.5.14.44 அரச விதைப்பண்ணை – இலுவங்குளம்

1.5.14.45 அரச விதைப்பண்ணை – அம்பதென்ன

1.5.14.46 விவசாய விதை விற்பனை நிலையம் - கொழும்பு 07

1.5.14.47 மரக்கறி விதை நிலையம் - கன்னொறுவை

1.5.14.48 விதை போஞ்சி அலகு - ரிகில்லகஸ்கட

1.5.14.49 விவசாய விதை விற்பனை நிலையம் - மாத்தறை

1.5.14.50 விவசாய விதை விற்பனை நிலையம் - மஹாஇலுப்பள்ளம

1.5.14.51 விவசாய விதை விற்பனை நிலையம் - பத்தலகொட

1.5.14.52 விவசாய விதை விற்பனை நிலையம் - வாகொல்லை

1.5.14.53 விவசாய விதை விற்பனை நிலையம் - மதுருகெடிய

1.5.14.54 விவசாய விதை விற்பனை நிலையம் - பண்டாரவெல

1.5.14.55 விவசாய விதை விற்பனை நிலையம் - பரந்தன்

1.5.14.56 விவசாய விதை விற்பனை நிலையம் - பொலொன்னறுவை

1.5.14.57 விவசாய விதை விற்பனை நிலையம் - அலுத்தரம

1.5.14.58 விவசாய விதை விற்பனை நிலையம் - அம்பலன்தோட்டை

1.5.14.59 விவசாய விதை விற்பனை நிலையம் - குண்டசாலை

1.5.14.60 விவசாய விதை விற்பனை நிலையம் - நிகவேரட்டிய

1.5.14.61 விவசாய விதை விற்பனை நிலையம் - பட்டஅத்த

1.5.14.62 விவசாய விதை விற்பனை நிலையம் - கன்னொறுவை

1.5.14.63 விதை உருளைக் கிழங்கு - சீதாஎளிய

1.5.14.64 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - அபேபுஸ்ஸ

1.5.14.65 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - வல்பிட

1.5.14.66 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -கொழும்பு 05

1.5.14.67 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - பஸ்யால

1.5.14.68 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - பத்தரமுல்ல

1.5.14.69 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - அம்பாறை

1.5.14.70 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - கரன்தியனாறு

1.5.14.71 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - இகினிமிடிய

1.5.14.72 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - யடியன

1.5.14.73 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -பெல்வெஹெர

1.5.14.74 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் -தெலிஜ்ஜவில

1.5.14.75 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - கல்தோட்டை

1.5.14.76 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - வீரபான

1.5.14.77 விதை, நடுகைப் பொருள் விற்பனை நிலையம் - புத்தளம்

1.5.14.78 மேலதிக உணவு பயிர் விதை களஞ்சியம் - இரஹங்கல, பொரலன்த

1.5.14.79 பூங்கா விஞ்ஞான ஆராய்ச்சி பண்ணை - பஸ்யால

1.5.15 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம்– கன்னொறுவ

1.5.15.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை) – கன்னொறுவ

1.5.15.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - அலுத்தரம

1.5.15.1.2 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - படஅத

1.5.15.1.3 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மஹாஇலுப்பள்ளம

1.5.15.1.4 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - நிகவெரட்டிய

1.5.15.1.5 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -பெல்வெஹெர

1.5.15.1.6 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -பொலொன்னறுவை

1.5.15.1.7 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பிபில

1.5.15.1.8 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - ஹிகுரக்கொட

1.5.15.1.9 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - கன்தலே

1.5.15.1.10 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - குண்டசாலை

1.5.15.1.11 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - சீதாஎலிய

1.5.15.1.12 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை- அம்பாறை

1.5.15.1.13 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பத்தலகொட

1.5.15.1.14 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மட்டக்களப்பு

1.5.15.1.15 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை -கொழும்பு

1.5.15.1.16 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - லபுதுவ

1.5.15.1.17 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - முருன்கன்

1.5.15.1.18 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பெல்மடுல்ல

1.5.15.1.19 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - ரிகில்லகஸ்கட

1.5.15.1.20 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - வவுனியா

1.5.15.1.21 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மாத்தறை

1.5.15.1.22 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - மதுகம

1.5.15.1.23 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - யாழ்ப்பாணம்

1.5.15.1.24 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை - பரன்தன்

1.5.15.1.25 விதை ஆராய்ச்சி பிரிவு - பேராதனை

1.5.15.1.26 விதை ஆராய்ச்சி பிரிவு - மஹாஇலுப்பள்ளம

1.5.15.1.27 விதை ஆராய்ச்சி பிரிவு - அலுத்தரம

1.5.15.1.28 விதை ஆராய்ச்சி பிரிவு - படஅத்த

1.5.15.1.29 விதை ஆராய்ச்சி பிரிவு - பரன்தன்

1.5.15.1.30 பிற் கட்டுபாட்டு களம் I - கன்னொறுவை

1.5.15.1.31 பிற் கட்டுபாட்டு களம் II - கன்னொறுவை

1.5.15.1.32 பிற் கட்டுபாட்டு களம் - சீதாஎலிய

1.5.15.1.33 பிற் கட்டுபாட்டு களம் - மஹாஇலுப்பள்ளம

1.5.15.1.34 பிற் கட்டுபாட்டு களம் - கரதியனாறு

1.5.15.1.35 பிற் கட்டுபாட்டு களம் வதை நூதனசாலை- பட்டஅத

1.5.15.1.36 வதை சுகாதார அலகு -கன்னொறுவை1.5.15.2. தாவரப் பாதுகாப்புச் சேவை – கன்னொறுவ

1.5.15.2.1 தாவரப் பாதுகாப்புச் சேவை - மஹாஇலுப்பள்ளம

1.5.15.2.2 தாவரப் பாதுகாப்புச் சேவை -போபுவல, களுத்துறை

1.5.15.3 பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலகம் - பேராதனை

1.5.15.4 தாவர கருவள நிலையம்) - கன்னொறுவ

1.5.15.5 தேசிய தாவர தடுப்புக்காப்பு சேவை – கட்டுநாயக்க

1.5.15.5.1 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு - கன்னொறுவை

1.5.15.5.2 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு - குவன்தொடுபொல,கொழும்பு

1.5.15.5.3 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு - குவன்தொடுபொல, மத்தள

1.5.15.5.4 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு -கொழுப்பு -துறைமுகம்

1.5.15.5.5 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு - ஹம்பாந்தோட்டை

1.5.15.5.6 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு -குவன்வன்தொடுபொல , யாழ்பாணம்

1.5.15.5.7 தாவரத் தடுப்புக் காப்புச் சேவை அலகு -மத்திய தபால் பரிமாற்றம்

1.5.16 நிர்வாக அலகு- பேராதனை

1.5.17 நிருவன பிரிவு - பேராதனை

1.5.18 பொறியியளாளர் பிரிவு -பேராதனை

1.5.18.1 பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - குண்டசாலை

1.5.18.2 பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் -பொலொன்னறுவை

1.5.18.3 பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - அகுணுகொலபெலெஸ்ஸ

1.5.18.4 பிரதேச பொறியியளாளர் வேலைத்தளம் - சீத்தாஎளிய

1.5.19 நிதிப்பிரிவு -பேராதனை

1.5.20 உள்ளக தணிக்கை அலகு - பேராதனை

1.5.21 முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பிட்டுப் பிரிவு - பேராதனை

**1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்/ நிதியங்கள்**

**இல்லை**

**1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்**

| **கருத்திட்டத்தின் பெயர்** | **நிதியளிக்கும் நிறுவனம்** | **மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்.)** | **கால எல்லை** |
|---|---|---|---|
| 1. ஆசியாவின் நெல் அறுவடையின் இடைவெளியினை நிரப்புதல். | IRRI | 2.47 | 2013 - 2022 |
| 2. AFACI உறுப்புரிமை நாடுகளுக்குப் பொருத்தமான அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்கும், அதிகூடிய விளைச்சல் ஒன்றினைப் பெற்றுத்தரும் நெல் வர்க்கங்களை பிளாஸ்மாப் பெறுமதியினைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்திக்கொள்ளல். | AFACI | 4.20 | 2022 - 2024 |
| 3. பல்வேறு சூழல்களில் நெருங்கிய விதானச் சூழலில் தெளிவான தன்மை மற்றும் நெல்லின் வெப்ப உறிஞ்சல் சிறுகாம்பிலி மலட்டுத்தன்மை என்பன தொடர்பாக ஆய்வு செய்தல். | NIAES | 0.46 | 2019 - 2022 |

| | | | |
|---|---|---|---|
| 4. ஆசிய வலயத்தில் இடம்பெயர் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான இடைப் பரிமாற்றுக் கட்டமைப்பு ஒன்றினைத் தாபித்தல் | AFACI | 5.30 | 2019 - 2022 |
| 5. ஆசியாவின் காய்கறி இனங்களின் அபிவிருத்தி | AFACI | 5.30 | 2021 - 2023 |
| 6. இலங்கையின் உலர் வலயத்தில் உயர் தரத்திலான வெங்காய விதை உற்பத்தி மாதிரிக் கிராமங்களின் அபிவிருத்தி | KOPIA | 4.03 | 2021 - 2023 |
| 7. இலங்கை வர்த்தக உற்பத்திக்கான ஜமனாரன் மாதிரிக் கிராமம் ஒன்றினை அபிவிருத்தி செய்தல் | KOPIA | 2.56 | 2021 - 2023 |
| 8. காளான் விவசாயிகளின் வருமானத்தினை அதிகரிப்பதற்காக உற்பத்தி மற்றும் பயன்பாட்டுத் தொழிநுட்பத்தினைத் தோற்றுவித்தல். | KOPIA | 2.0 | 2017 - 2022 |
| 9. விவசாய உற்பத்திகளைத் தயாரிக்கும் தொழிநுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கல் | AFACI | 1.156 | 2019 - 2023 |
| 10. பின் அறுவடைக் கைநூல்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் பாவனை | AFACI | 0.11 | 2017 - 2022 |
| 11. இலங்கையின் உணவுப் பயிர்களில் கருப்பு வெட்டுப் புழுக்களைக் (*Helicoverpa* spp,) கட்டுப்படுத்துவதற்காக நியுக்ளியோ பொலிஹெட்ரொன் வைரஸ்களின் Nucleo polyhedron viruses (NPV) வினைத்திறனினை பண்பு விரித்துரைத்தல் | USDA | 1.81 | 2020 - 2023 |
| 12. உயிரியல் பீடை நாசினிகளை மேம்படுத்துவதன் ஊடாக ஆசிய பீடை நாசினிகளின் மீதிகளைக் குறைத்தல். | APAARI | 0.87 | 2012 - 2023 |
| 13. இலங்கையின் விஷேட சூழல் மாசடைதல் வலயங்கள் மூன்றின் வளிமண்டல நைதரசன் மாசடைதல் மூலத்தை மதிப்பீடு செய்தல், சுற்றாடல் நிலைபேற்றுத்தன்மை மற்றும் மானிட சுகாதாரம் என்பவற்றிற்கு ஏற்படுத்தும் பாதிப்பு மற்றும் தீர்வு நடவடிக்கைகளைக் கண்டறிதல். | IAEA | 0.867 | 2018 - 2023 |
| 14. இலங்கையில் பிரகடனம் செய்யப்பட்ட பாதுகாப்பு வலயங்களில் மலைநாட்டு விவசாய நீரேந்து பிரதேசங்களில் விவசாயக் கழிவு மூலங்களின் தோற்றுவாய்கள் மற்றும் கொண்டு செல்லும் வழிமுறைகளை அடையாளம் காணல். | IAEA | 2.05 | 2018 - 2023 |
| 15. ஆசியாவின் மண் வரைபடம் மற்றும் தேசிய மண் தகவல்கள் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தல். | AFACI | 7.0 | 2019 - 2023 |
| 16. தென்னாசியாவில் காலநிலை ஸ்மார்ட் விவசாயத்தினை விருத்தி செய்வதற்கான சம்மேளனம். | SDF | 3.444 | 2022 - 2024 |
| 17. பெறுமதிச்சங்கிலி (valuechain) அபிவிருத்தியின் மீது கவனம் செலுத்தி சிற்றளவிலான விவசாய வியாபாரங்களின் ஊடாக சாக் வலயத்தில் சிற்றளவிலான விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை விருத்தி செய்தல். | SDF | 15.666 | 2018 - 2022 |
| 18. தாவரங்களுக்கு அமைய நிலையான பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித்திட்டம் | CABI | 0.740 | 2022 - 2023 |

# அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

## விஷேட வெற்றிகள்

### நெல்

- 2022 ஆம் ஆண்டின் 4 புதிய நெல் இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.
    - Ld 376 : 3 ½ மாத வயதுப் பிரிவிற்கு உரித்தான வெள்ளை நாடு இனம் ஒன்றாகும். சராசரி அறுவடை உலர் வலயத்தில் ஹெக்டயார் ஒன்றிற்கு கிட்டத்தட்ட 6 தொன்களும் ஈர வலயத்தில் ஹெக்டயார் ஒன்றிற்கு கிட்டத்தட்ட 4 தொன்களும் ஆகும்.
    - Bg 377 : 3 ½ மாத வயதுப் பிரிவிற்கு உரித்தான வெள்ளை நாடு இனம் ஒன்றாகும். வரட்சிக்கு நடுத்தர அளவில் தாக்குப் பிடிக்கும் இந்த இனம் இலங்கையின் மழையினால் போஷிக்கப்படும் பிரதேசங்களில் பயிரிடுவதற்கு மிகவும் பொருத்தமானதாகும். சராசரி அறுவடையானது மழை நீரினால் போஷிக்கப்படும் நிலைமைகளின் கீழ் ஹெக்டயார் ஒன்றிற்கு 4.1 தொன் ஆவதுடன் நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் ஹெக்டயார் ஒன்றிற்கு 6.4 தொன்கள் ஆகும்.
    - At 378 : 3 ½ மாத வயதுப் பிரிவிற்கு உரித்தான வெள்ளை நாடு இனம் ஒன்றாகும். உலர் வலயத்தில் சராசரி அறுவடை ஹெக்டயார் ஒன்றிற்கு 7.3 தொன்களும் ஈர வலயத்தில் அறுவடையானது ஹெக்டயார் ஒன்றிற்கு 5.3 தொன்களும் ஆகும்.
    - Bg 381 IP : 3 ½ மாத வயதுப் பிரிவிற்கு உரித்தான ஒரளவு ஒட்டும் தன்மை உடைய வெள்ளை நாடு இனம் ஒன்றாகும். விஷேடமான மணம் ஒன்றினைக் கொண்டது. அரிசியினால் தயாரிக்கப்படும் உற்பத்திகளுக்கு மிகவும் பொருத்தமானது. சராசரி அறுவடை ஹெக்டயார் ஒன்றிற்கு 6.2 தொன்கள் ஆகும்.
- இயற்கையான மண் பங்கசுக்களைப் பயன்படுத்தி நெற் செய்கைக்கான பொசுபரசு உரத் தேவைப்பாட்டினை 50% இனால் குறைக்கும் உயிரியல் உரம் ஒன்று உற்பத்தி செய்யப்பட்டது. மேற்படி உயிரியல் உரத்தை ஏக்கர் ஒன்றிற்கு 6 கிலோகிராம் வீதம் இடுவதன் மூலம் இரசாயனப் பொசுபரசு உரத்தினைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் அறுவடைக்கு சமனான அறுவடை ஒன்றினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.
- சேதனப் பசளையினைப் பயன்படுத்தி பயிரிடப்பட்ட மரபு ரீதியான நெல் இனங்களுள் 'மடதாவலு" மற்றும் 'சுது ஹீனட்டி" ஆகிய இனங்கள் ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் அதிகூடிய விளைச்சலைப் பெற்றுத்தருவது ஆய்வுகளின் மூலம் அறிய முடிந்தது.
- ட்ரோனர் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி நெற் செய்கைத் துறையில் களைப் பயிர்களை அடையாளம் காணல் மற்றும் குறிப்பிட்ட இடத்திற்கு களை நாசினிகளை இடுதல் என்பவற்றிற்கான ஒத்திகை பார்க்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### துணை உணவுப் பயிர்கள்

- எளிய தொடர்த் திருப்புகை (SSR) அடையாளத்தைப் பயன்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட நெறிமுறை (ப்ரொடோகோல்) MI MZ Hy 3, MI MZ Hy 4 மற்றும் MI MZ Hy 5 கலப்பினச் சோள இனங்களின் விதை அத்தாட்சிப்படுத்தல் செயற்பாடு தொடர்பில் மரபு ரீதியான விருத்தியினை பரீட்சிப்பதற்கு (GOT) முறையை விட மிகவும் பயனுறுதி உடையதாகக் காணப்பட்டது. மேலும் இந்தக் கண்டுபிடிப்பு இனப்பெருக்கம் செய்பவர்களுக்கும் மற்றும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட சோளக் கலப்பின வர்த்தக விதை இருப்புக்களில் கலப்பினம் அல்லாத விதை கலந்துள்ளமையினை அடையாளம் காண்பதற்குத் துணை புரியும்.

- உலர் வலய நிலைமைகளுள் வெற்றியினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட நாற்பது டயஸ்கோரியா இனங்களுள் ரத்தினவள்ளி, கிரி அல, எங்கிலி அல் (மொனராகலை), ரத்தம்பல, ஹீன் எங்கிலி அல, சூட்ட ஹிங்குரல, உடல, ஹிங்குரல, கரணை மற்றும் எங்கிலி அல என்பன நடுத்தர அளவிலான அறுவடை ஒன்றினை (ஹெக்டயார் ஒன்றிற்கு 11-19 தொன்கள் பெற்றுத் தருவதுடன் யாழ்ப்பான இன்னல, மஹா குகுளல, குகுளல, நத்தல, ஊதா நிற ராஜ அல, ரெவுல் குகுளல, மட்டக்களப்பு இராசவள்ளி தம் அல 1, மஹா அங்கிலி அல மற்றும் தம் அல 2 என்பன அதிகூடிய அறுவடை ஒன்றினைப் (ஹெக்டயார் ஒன்றிற்கு 20-30 தொன்கள்) பெற்றுத் தந்துள்ளன. ஏனைய டயஸ்கோரியா வகைகள் ஹெக்டயார் ஒன்றிற்கு 9 தொன்களிலும் குறைவான அறுவடை ஒன்றினைப் பெற்றுத் தந்தன.
- இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தி பயிர் செய்வதனை இலகுபடுத்துவதற்காக எள்ளு மற்றும் குரக்கன் போன்ற சிறு விதைகளைத் தூவுவதற்கான தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டது.
- அறுவடை செய்து இரண்டு வாரங்களின் பின்னர் ஒரு மில்லியனுக்கு 50 பகுதி செறிவினைக் கொண்ட ஈதொபோன் திரவத்தில் அமிழ்த்தி வைப்பதன் மூலம் பாரிய விதைகளைக் கொண்ட மரமுந்திரிகை இனங்களின் 7 வாரங்களைக் கொண்ட உறங்கு நிலையினைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.
- உள்நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையில் ஏற்கனவே நிலவும் கௌபீ கதிரடிக்கும் சாதனம் நவீனமயப்படுத்தப்பட்டது.
- நாற்று நடப்பட்ட (Transplanted) வயல் நிலங்களில் அறிமுகம் செய்வதற்காக 8" சக்தி களை பிடுங்கி ஒன்றின் வடிவமைத்து பூர்த்தி செய்யப்பட்டது.
- இயந்திரத்தின் துணையுடன் மிளகாய் விதைகளைத் தயாரிப்பதன் விளைதிறனினை விருத்தி செய்வதற்கான மிளகாய் விதைகளைப் பிரித்தெடுக்கும் சாதனம் ஒன்று வடிவமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டது.
- வறுக்கப்பட்ட மற்றும் அவிக்கப்பட்ட கொள்ளு மாவினைக் கலந்து போசணை மிக்க மற்றும் உடலியற் செயற்பாடுகளை விருத்தி செய்யும் விரைவு உற்பத்தி ஒன்றாக 'ரசம்" கியூப் தயாரிக்கப்பட்டது.

## <u>தோட்டப் பயிர்கள்</u>

***காய்கறிகள்***

- கீழே குறிப்பிடப்பட்டு உள்ள புதிய காய்கறி இனங்கள் பரிந்துரை செய்யப்பட்டன.
    - HORDI RED : குறுகிய கால (5-6 மாதங்கள்) அதிக்கூடிய விளைச்சலினைப் பெற்றுத்தரும் மரவள்ளி இனம் ஒன்றாகும்.
    - HORDI Bean 3 : மத்திய நாட்டு ஈர வலயம் மற்றும் இடை மத்திய வலயங்களுக்கு பொருத்தமான "HORDI கொத்து" என்ற பெயரில் அழைக்கப்படும் அதிக்கூடிய விளைச்சலைத் தரும் போஞ்சி இனம் ஒன்றாகும்.
    - HORDI Curly : நாடு பூராகவும் பயிரிடுவதற்குப் பொருத்தமான அதிக்கூடிய விளைச்சலைத் தரும் காளான் இனம் ஒன்றாகும்.
    - GKEB - 1 (மெனிகே) மற்றும் GKEB - 2 (டிகிரா) உயர் தரம் வாய்ந்த வட்டுக் கத்தரி இனங்கள் இரண்டு.
- மண் மற்றும் உரப் பகுப்பாய்விற்காக அங்கீகாரச் சான்றிதழ் (ISO/IEC) 17025 - 2017) பெற்றுக் கொள்ளப்பட்டது.
- காய்கறிப் பயிர்ச் செய்கையில் செடிப்பேன் (அஃபிட்) களை ஒழிப்பதற்காக செடிப்பேனின் ஒட்டுண்ணி ஒன்றாகிய Aphidius spp ஆய்வு கூடத்தினுள் பெருகச் செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கான இலகுவான வழிமுறை ஒன்றாக 'செடிப்பேன் கொல்லி" எனத் தயாரிக்கப்பட்ட அட்டைப் பத்திரங்களைத் தயாரித்து விவசாயத் துறைகளுக்கு வழங்குதல். இதனூடாக அதிக பூச்சி நாசினிகளின் பாவனை அற்ற காய்கறிச் செய்கைகளை இந்தப் பீடைத் தாக்கத்தில் இருந்து தடுத்துக் கொள்வதற்கு இயலுமாகி உள்ளது.
- சோளத்தில் படைப்புழுக்கள் மற்றும் காய்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களில் Spodoptera மயிர்க் கொட்டிகளின் சேதம் என்பவற்றின் உயிரியல் கட்டுப்பாட்டுக்காக முட்டை ஒட்டுண்ணிகள் (Telenomus remus) கிட்டத்தட்ட 74,000 இனை செயற்கையாக பெருகச் செய்து கண்டி, ஹம்பாந்தோட்டை, பதுளை, குருணாகல் மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் விவசாய நிலங்களுக்கு விடுவிக்கப்பட்டு உள்ளன.

- காய்கறிப் பயிர்களில் பூச்சிநாசினிகளின் எச்சங்களைப் பரீட்சிப்பதற்காக நொதியங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவிலான துரித உயிரியல் பகுப்பாய்வுத் தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.
- வெண்டிக்காய் - தேசிய ஒருங்கிணைப்பு இனங்களை ஒத்திகை பார்த்தல் (NCVT) பூர்த்தி செய்யப்பட்டதுடன் MK Hy 3 இற்கான இனங்களின் இசைவாக்கம் (VAT) மற்றும் சிறப்பியல்பு ஒத்த தன்மை மற்றும் நிலைபேற்றுத்தன்மை (DUS) என்பவற்றைப் பரீட்சித்தல் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய கலப்பின MK Hy 4, MK hy 5 மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை MK 8.12 தேசிய ஒருங்கிணைப்பு இனங்கள் ஒத்திகைக்காகப் பெயரிடப்பட்டன.
- தேசிய ஒருங்கிணைப்பு இனங்களின் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக திறந்த மகரந்தச் சேர்க்கை பீர்க்கு - MK 11 இனம் பெயரிடப்பட்டதுடன் அதற்காக விதைகள் முன்வைக்கப்பட்டன.

***பழங்கள்***

- Annona Muricata இற்காக உயர் தரத்தில் அதிக்கூடிய விளைச்சலைத் தரும் மிகவும் சிறந்த விதானக் கட்டமைப்பாக 3-4 கிளைகள் வரை வைத்துக் கொண்டு தண்டில் 0.8 - 0.9 மீற்றர் உயரத்தில் வெட்டி கத்தரிப்பு செய்தல் என்பது அடையாளம் காணப்பட்டது.
- 'வெல் அனோதா" இனை ஒட்டுக்கட்டை ஒன்றாகப் பயன்படுத்தி முள் அன்னாமுன்னா விற்கான வெற்றிகரமான முறையில் களத்தில் ஒட்டல் செய்யும் முறை ஒன்று அடையாளம் காணப்பட்டது.
- உள்நாட்டுச் சந்தைக்காக முன்வைப்பதற்கு 'ரத் கெசெல்" அறுவடை செய்யும் மிகவும் பொருத்தமான பருவம் பூப்பூத்து 13 வாரங்களின் பின்னர் என்பது அடையாளம் காணப்பட்டது.
- ஒரு மில்லியனிற்கு 400 பகுதிகள் (400 ppm) எனும் செறிவில் செலிசிலிக் அமிலத்தை தாவர இலைகளுக்குத் தெளிப்பதன் மூலம் முள் அன்னாமுன்னாவின் பூத்தலை ஊக்குவிப்பதனை ஒரே முறையில் மேற்கொள்ள முடியும் என்பது கண்டறியப்பட்டது.
- நெப்தலிக் அசெற்றிக் அமிலத்தை (NAA) ஒரு மில்லியனுக்கு 5000 பகுதிகள் என்ற செறிவில் தெளிப்பதன் மூலம் அன்னாமுன்னாவின் உறங்கு நிலையினை குறைத்துக் கொள்ள முடியும் என்பது கண்டறியப்பட்டது.
- மெகடமியாவிற்கான வெற்றிகரமான வித்து முளைத்தல் முறை ஒன்று அடையாளம் காணப்பட்டது.
- இயற்கையான காளான் இனம் ஒன்றாகிய மாகந்துர கபில இனத்திற்கான பயிர் செய்யும் தொழிநுட்பம் தோற்றுவிக்கப்பட்டு உள்ளது.
- 'கொத்மலை" பலா மற்றும் 'உலுபிடீ" ஈரப்பலா இனத்தின் மா பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்குப் பொருத்தமானது எனக் கண்டறியப்பட்டது
- 50% கோதுமை மாவு + 10% பலாச் சுளை மாவு மற்றும் 40% பலா விதை மாவு கலவை கையினால் தயாரிக்கும் நூடில்ஸ் உற்பத்திக்குப் பொருத்தமானது எனக் கண்டறியப்பட்டது.
- லொவி மற்றும் காமரங்காவினைப் பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் இரண்டு அறிமுகம் செய்யப்பட்டன. உயிரியல் செயற்பாட்டுக் கலவைகளுக்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சிறிய அளவில் ர்ரைகொடேர்மாவை பல்பெருக்கம் அடையச் செய்வதற்கான இலாபகரமான காவி ஊடகமாக காட்டுச் சூரியகாந்தி, (Tithonia diversifolia), பருவக் கொடி (Pothos scandens) மற்றும் தெப்பட்டி என்பன அடையாளம் காணப்பட்டு உள்ளன.
- மாதுளைப் பழ அழுகும் நோய்க்குக் காரணமான நோய்க் காரணியாக Aspergillus violaceofuscus, Lasiodiplodia theoloromae, Phompsis spp, Dioaporthe discodispora மற்றும் Pestalotiopsis spp என்ற பெயரினை உடைய இனங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.
- மாதுளையில் என்தரக்னோஸ் நோயை உண்டு பண்ணும் (Colletoricum gloesporiodes) இற்கான சூழலுக்கு சாதகமான கட்டுப்பாட்டு முறைகள் அடையாளம் காணப்பட்டு உள்ளன.
- வாழையில் எந்திரக்னோஸ் நோயினை ஏற்படுத்தும் (Colletotricum Musae) இற்கு எதிராகத் தெரிவு செய்யப்பட்ட தாவரச் சாறுகளில், ஆய்வு கூட சோதனையில் எதிர் பங்கசுக்களின் தோற்றம் அடையாளம் காணப்பட்டு உள்ளது.

- பொன்னாங்கானியில் (Alternanthera sessile), Cercospora இலைப்புள்ளி மற்றும் வெள்ளைத் துருப்பிடித்தல் நோயின் தீவிரத்தன்மையினை வேப்ப எண்ணெய் (3 ml/L) சிற்றனல்லா எண்ணெய் (3 ml/L) மற்றும் கராம்பு இலைச் சாறு (350 g/L) தெளிப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் குறைகின்றது என்பது கண்டறியப்பட்டது.
- Agrobacterium மத்தியஸ்த உருமாற்றத்தின் மூலம் பப்பாசி வளையப் புள்ளி வைரஸின் புரத மரபணு உறையை வெளிப்படுத்தும் வகையில் வளையப் புள்ளி வைரஸ் நோய்க்கு எதிரான மரபணு மாற்று பப்பாசித் தாவரம் உற்பத்தி செய்யப்பட்டது.
- மூலக்கூற்று முறையின் மூலம் கொடி தோடையில் வைரஸ் நோய்கள் கண்டறியப்பட்டு உள்ளதுடன் நேரகாலத்துடன் கொடி தோடை சித்திர வைரஸினை அடையாளம் காண்பதற்கான குறிப்பிட்ட அடையாளம் காணும் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளது.
- நெமடோடற்ற கொய்யா நடுகைப் பொருட்களைத் தயாரிப்பதற்காக கொள்கலன் ஒன்றிற்கு 1 மில்லி லீற்றர் 4001/SC செறிவினைக் கொண்ட ப்ளுபைரம்களில் அமிழ்த்தி வைத்தல் பரிந்துரை செய்யப்பட்டது.
- பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேப்பம் தயாரிப்பு இரண்டினைத் தெளிப்பதன் மூலம் 7 நாட்களுக்குப் பின்னர் மாங்காய்களின் சாற்றினை உறிஞ்சிக் குடிக்கும் பீடை வகைகள் இரண்டிற்கும் (Aulacapsis spp மற்றும் சிவப்பு சிலந்தி சிற்றுண்ணி) எதிராக சாதகமான பெறுபேறுகளைக் காண முடிந்தது.
- வாழை வேர் குள்ளனினை ஒழிப்பதற்காக பெரமோன் வெளியேற்றும் தொகுதியினை தரை மட்டத்தில் 20 மீற்றர் இடைவெளியில் பொருத்துதல் 3 மாத காலங்களுக்குப் பயனுறுதி உள்ளது என்பது கண்டறியப்பட்டது.
- கொஸ்டரிகன் கொய்யா ஒட்டுக்கட்டையில் கொய்யாக் கன்றுகளை ஒட்டுச் செய்தல் மூலம் கொய்யா மரங்களின் வேர்க் கணு நெமடோடாக்களை கட்டுப்படுத்த முடியும் என்பது அடையாளம் காணப்பட்டது.
- Eudocima இனங்கள் இரண்டு உட்பட பழங்களின் சாற்றினை உறிஞ்சிக் குடிக்கும் சில அந்துப்பூச்சி இனங்கள் ஈர வலய வீட்டுத் தோட்டங்களில் எலுமிச்சைப் பயிர்களுடன் கலந்து வளர்ந்திருந்த காமரங்கா மரங்களில் அடையாளம் காணப்பட்டன.
- சேதன அன்னாசி உற்பத்திக்குப் பொருத்தமான போசணை முகாமைத்துவ வழிமுறைகள் அடையாளம் காணப்பட்டன.
- வருடம் ஒன்றிற்கு கன்று ஒன்றிற்கு 200 கிராம் நாக சல்பேற்று மற்றும் 200 கிராம் மக்னீசியம் சல்பேற்று என்பவற்றை மண்ணிற்கு இடுவதன் மூலம் மஞ்சள் மெண்டரிங் விளைச்சலின் தரம் அதிகரிப்பது கண்டறியப்பட்டது.
- வளம் மிக்க சேதனப் பசளையினை உற்பத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பல்வேறு மா மற்றும் நுண் போசணிகள் உள்ளடக்கப்பட்ட உயிரியல் கரி வகைகள் நான்கு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன. வாழையின் போலித் தண்டினால் தயாரிக்கப்படும் உயிரியல் கரிப் போசணைகளை அதிக்கூடிய அளவில் உறிஞ்சும் ஆற்றல் உள்ளதனை வெளிக்காட்டி உள்ளது.
- முருஷிகே மற்றும் ஸ்கூக் ஆரம்ப ஊடகம் மற்றும் வைரத் தாவர ஊடகங்கள் எனும் ஊடகங்களில் 6 - BAP மற்றும் கைனடின் கலப்பதன் மூலம் ஈரப்பலாவில் நுண் இனப்பெருக்கம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- 5000 இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இழைய வளர்ப்புக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக புதிய ஆயிரம் இனப்பெருக்க நடுகை ஊடகங்கள் தாபிக்கப்பட்டு உள்ளன.
- மாங்காய்களின் அறுவடைக்குப் பின்னான பங்கசு நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக லக்ரிக் அமிலத்தை நொதிக்கச் செய்வதன் மூலம் தயாரிக்கப்படும் இயற்கையான துணை உற்பத்திகளைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டது.
- ரத்ன மற்றும் Cp-13 எனும் பெற்றோர் பரம்பரையின் ஊடாக ஹொரண பப்பாசி கலப்பினம் - 1 இனப்பெருக்க விதை ஒரு கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டது.
- ஹொரண கோல்ட் கொடி தோடை இனப்பெருக்க விதை இரண்டு கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டது.
- கொத்தணிக் கிராமம் ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்காக ரஹங்கல பிரதேசத்தின் 200 விவசாயிகளுக்கு இடையில் மஞ்சள் மெண்டரிங் மூன்று இனங்களுள் (ஹொரண எஹிமி 01 : ஹொரண எஹிமி 02 : ஹொரண எஹிமி 03) 10,000 ஒட்டுக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## இயற்கை வள முகாமைத்துவம்

- காலநிலையியல் திணைக்களத்தின் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின், விவசாயத் திணைக்களத்தின் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப நிபுணர்களை உள்ளடக்கிய விவசாயக் காலநிலை ஆலோசகர் குழு ஒன்றின் தொழிநுட்ப ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு விவசாய உற்பத்தியில் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தினை குறைத்துக் கொள்வதற்காக மாதாந்த விவசாயக் காலநிலை ஆலோசனைகள் எதிர்வு கூறப்பட்டது.
- தேசிய விவசாயக் காலநிலையியல் தரவுகள் கண்காணிப்பு வலையமைப்பு வெற்றிகரமாகப் பேணப்பட்டு வருவதுடன் திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நவீன விவசாயக் காலநிலை அலகு ஒன்று தாபிக்கப்பட்டது.
- மொரகஹகந்த புதிய விஷேட சேதன வலயத்திற்காக (3,410 ஹெக்டயார்) மண் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்ட நில தகைமை மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டு வரைபடமாக்கல் மற்றும் பிரதேசத்திற்கு அமைய பயிர்களுக்கான பரிந்துரை அறிக்கைகளைத் தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டது.
- மாங்காய், மாதுளை, ரம்புட்டான், மெங்கூஸ், தூரியன் மற்றும் வாழை என்பவற்றிற்கான இலங்கையில் சாத்தியவளம் வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டன.
- மண் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் தழுவப்படும் முக்கிய வலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விவசாய மண் பாதுகாப்புத் திட்டங்கள், மழை நீர் வடிகாலமைப்புத் திட்டங்கள், காணி அபிவிருத்தி வரைபடங்கள், பொறியியல் நில வரைபடங்கள், மற்றும் விவசாய ஆலோசனை வலயங்களை ஒதுக்குவதற்கான வரைபடங்கள் என்பன தயாரிக்கப்பட்டன
- விவசாய ஆலோசனை வலயங்களை ஒதுக்குவதற்காக GIS வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.
- இலங்கையின் காலநிலைக்கு உகந்த விவசாய வழிமுறைகள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது.
- மண் மற்றும் நீர் பாதுகாப்புத் தொழில்நுட்பக் கைநூல் 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

## சமூக பொருளாதாரம் மற்றும் திட்டமிடல்

- மறுவயற் பயிர்கள் மற்றும் காய்கறிகளுக்காக தேசிய ரீதியில் வர்க்கங்களுக்குரிய அறிக்கை ஒன்றினை உள்ளடக்கி தற்போது நிலவும் பயிர்ச் செய்கைகள் தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை முனைப்பாக வழங்கும் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட பயிர் எதிர்வுகூறல் கட்டமைப்பு ஒன்றாகிய Croplook.net இணையத்தளம் மேலும் விருத்தி செய்யப்பட்டது.
- 2021/22 பெரும் போகத்தின் பயிர் உற்பத்திச் செலவு மற்றும் வருமான தொகைகள் தொடர்பான வெளியீடு, வெளியிடப்பட்டு உள்ளதுடன், உற்பத்தி உள்ளீடுகளின் பாவனை, சராசரி அறுவடை, மொத்த பயிர்ச் செய்கைச் செலவு, உற்பத்தி அலகிற்கான செலவு, பண்ணை விலை மற்றும் ஒவ்வொரு பயிர்களுக்குமான மொத்த மற்றும் தேறிய வருமான தொகைகள் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.
- 2021/22 பெரும்போகம், 2022 சிறுபோகம் மற்றும் 2022/23 முன் பெரும்போகம் என்பன தழுவப்படும் வகையில் 2022 ஆம் ஆண்டில் பத்து பயிர் எதிர்வு கூறல் அறிக்கைகள் (போகம் ஒன்றிற்கு ஐந்து) தயாரிக்கப்பட்டன.
- காய்கறிகளைப் பயிரிடுபவர்களுக்கு தமது உற்பத்திகளுக்கு சிறந்த விலை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் சந்தையில் ஏற்படக் கூடிய மிகைகள் மற்றும் குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்காக உரிய நேரத்தில் பயிர் செய்யக்கூடிய சரியான பயிர் மற்றும் நில அளவு தொடர்பான குறிகாட்டி ஒன்றாக காய்கறிகளுக்கான முன்கூட்டியே ஆபத்து அச்சுறுத்தல் செய்திக் கட்டமைப்பு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.
- உற்பத்தி (போகம் வாரியாக) பயிர் செய்யும் நில அளவு, அறுவடைக் கால அட்டவணை, இறக்குமதி, பயிரின் கிடைப்புத் தன்மை மற்றும் விலை வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய 'Crop Watch' வெளியீடு மாதாந்தம் இற்றைப்படுத்தப்பட்டது.

- தெரிவு செய்யப்பட்ட மலைநாட்டு மற்றும் தாழ்நாட்டு காய்கறிப் பயிர்கள் 14 இற்கான வர்க்கங்கள் பற்றிய விபரம் 2022 வருடாந்த வெளியீடுகள் கோவையில் இரண்டாவது, தடவையாகவும் தயாரிக்கப்பட்ட இலங்கைக் காய்கறி வர்க்கங்களின் பரவல் 2022 ஆம் ஆண்டின் தொகுதியில் உள்ளடக்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டிற்கான சமூக பொருளாதாரத் தரவுகள், காணிப் பரிபாலன வகை, பயிரிடும் நில அளவு மற்றும் உற்பத்தி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி புள்ளி விபரவியல் தனிநபர் கிடைப் புத்தன்மை உணவுப் பயிர்கள் தொடர்பான புள்ளி விபரவில் தகவல்கள் என்பன உள்ளடங்கி AgStat இன் XIX தொகுதி தயாரிக்கப்பட்டு உள்ளது.

- 2022 ஆம் ஆண்டிற்கு உரிய வகையில் பழப் பயிர்கள் மற்றும் பூஞ்செடிகள் செய்கை என்பவற்றிற்கான பயிர் தொழில் துறையின் வரவுசெலவினைத் தயாரிப்பதற்காக பன்னிரண்டு பழப் பயிர்கள் (தோடை, எலுமிச்சை, கொடி தோடை, அன்னாசி, ரம்புட்டான், பப்பாசி, மா, வாழை, தூரியன், முள் அனோதா, கொய்யா மற்றும் ஆணைக் கொய்யா) தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு உள்ளதுடன் பயிர்களுக்கான வரவுசெலவு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## <u>விரிவாக்கம் மற்றும் பயிற்சி</u>

- 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் உரங்கள் தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் மத்தியிலும் பிரதேச வாரியாக வழிகாட்டல் மற்றும் தொழிநுட்ப அறிவினை வழங்குதல் என்பவற்றின் ஊடாக 1,300,798 ஹெக்டயார் நெல் பயிரிடப்பட்டு 3,564,000 மெ.தொன் அறுவடை பெற்றுக் கொள்ளப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய தேவைப்பாட்டின் கிட்டத்தட்ட 83.3மூ ஆகும்.

- விவசாயிகளின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கு மற்றும் விலங்கு உணவு விநியோகத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக 67,000 ஹெக்டயார் சோளத்தினைப் பயிரிடுவதற்கு இயலுமாகியதுடன் அதன் மூலம் 220,000 மெ.தொன் அறுவடை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. இதற்காக ஜைக்கா (JICA) நிறுவனம் மற்றும் தாய்லாந்து தூதரகத்தின் உதவியின் கீழ் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தின் நேரடியான தலையீட்டின் மூலம் 34,000 விவசாயிகளுக்கு 34,000 ஏக்கர் சோளத்தைப் பயிரிடுவதற்காக விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

- விதையினை இறக்குமதி செய்வதற்காக செலவாகும் அந்நியச் செலவாணியினை சேமித்து வைத்துக் கொள்வதற்காக, 2022 ஆம் ஆண்டின் சிறு போகத்திற்காக விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதன் மூலம் உள்நாட்டு MI MZ Hy 05 கலப்பின சோள விதை 35 மெ.தொன் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த விதைகளின் மூலம் விவசாயிகளுக்கான ஒத்திகை பார்த்தல்களாக 01 ஏக்கர் அளவான 1700 செயல்விளக்க மாதிரி நிலங்களைத் தாபிக்க இயலுமாகியது. மேலும் பேபி கோன் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு இடையில் உள்நாட்டு திறந்த மகரந்தச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்ட சோள இனங்களை பிரபல்யம் செய்வதற்காக 01 ஏக்கர் அளவான 1300 செயல்விளக்க மாதிரி நிலங்கள் தாபிக்கப்பட்டன.

- சோளப் பயிர்ச் செய்கையினை இயந்திர மயமாக்கல் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றிற்காக லேஸர் மட்டம் செய்யும் 04 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளதுடன் அநுராதபுரம், அம்பாறை, ஹஸலக, மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் 40 மாதிரி செயல்விளக்கம் மூலம் தாபிக்கப்பட்டு உரிய தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

- விவசாயிகளுக்கு இடையில் இணைந்த பீடை முகாமைத்துவ முறைகளைப் பிரபல்யம் செய்வதன் மூலம் 2022/23 பெரும்போகத்தில் சோளப் பயிர்ச் செய்கையின் தொற்று நோய் ஒன்றாகத் தோன்றிய படைப்புழுச் சேதத்தை 3மூ இலும் பார்க்க குறைத்துக் கொள்ள முடியும்.

- 2022 ஆம் ஆண்டில் சிறுபோகத்தில் மிளகாயினை 4,958 ஹெக்டயார்களில் பயிரிட முடிந்ததுடன் 49,578 தொன்களை உற்பத்தி செய்ய முடிந்தது. உள்நாட்டுக் கலப்பின இனங்கள் MI MZ Hy 01 யை பயிர் செய்தல் மற்றும் ஏனைய தொழில்நுட்பப் பகேஜ்களை விவசாயிகளுக்கு இடையில் பிரபல்யம் செய்வதன் மூலம் ஹெக்டயர் ஒன்றிற்கு 10 மெட்ரிக் தொன் வரை அறுவடையினை அதிகரித்துக் கொள்வதற்கு இயலுமாகியது.

- 2022 ஆம் ஆண்டில், நிலவிய கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் உரங்களின் பற்றாக்குறை ஆகிய நிலைமைகளின் கீழும் தேசிய ரீதியான கேள்வியினை பூர்த்தி செய்வதற்காக மறுவயற் பயிர்களின் செய்கையினை மிளகாய் 8,824 ஹெக்டயார், வெங்காயம் 2,365 ஹெக்டயார், சின்ன வெங்காயம் 2,995 ஹெக்டயார், சோயா போஞ்சி 6,046 ஹெக்டயார், பயறு 10,577 ஹெக்டயார், கௌபி 9,206 ஹெக்டயார், எள்ளு 10,547 ஹெக்டயார், மரமுந்திரிகை 15,906 ஹெக்டயார் மற்றும் உருளைக் கிழங்கு 2,388 ஹெக்டயார் எனப் பேணி வரப்பட்டது.

- சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை (GAP) விவசாயிகளுக்கு இடையில் பிரபல்யம் செய்வதற்கு மற்றும் உயர் தரத்திலான ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட விவசாய உற்பத்திகளை சந்தைக்கு வழங்குவதற்கு GAP சான்றிதழ் உடனான 710 பண்ணைகளைப் பதிவு செய்ய முடிந்தது. அவ்வாறே ஆரோக்கியமான அரிசி உற்பத்திக்கு GAP அத்தாட்சிப்படுத்தப்பட்ட நெல் பண்ணை 400 ஏக்கர்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

- இளைஞர்களுக்கு விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் அறிவினை வழங்குதல் மற்றும் புதிய விவசாயத் தொழில் முயற்சியாளர்களைத் தோற்றுவித்தல் என்பவற்றிற்காக 2022 ஆம் ஆண்டில் விவசாயக் கல்லூரிகளின் ஊடாக NVQ 05 தேசிய டிப்ளோமாதாரிகள் 203 பேரும் மற்றும் NVQ 06 உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் 351 பேரும் டிப்ளோமாக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

- மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் தழுவப்படும் வகையில் 400 அரச பாடசாலைகளில் 400 தொழில் முயற்சி பாடசாலைத் தோட்ட நிகழ்சிகள் நடாத்தப்பட்டன.

- இளைஞர் பரம்பரைகளுக்கு இடையில் விவசாயத்தை பிரபல்யம் செய்வதற்காக அரச சப்ரகமுவ மாகாணத்தின் 50 இளம் விவசாயக் குழுக்களின் பங்களிப்பில் விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பான வினாவிடைப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உணவுத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோருக்கு இடையில் இலங்கைக்கு உரிய உள்நாட்டு போசணை மிகு உணவுகளை விருத்தி செய்வதற்காக மாத்தளை அலுவிஹாரை மற்றும் தெலுல்ல பிரதேசங்கள் தழுவப்படும் வகையில் 'ஹெல பொஜுன்" விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டு உள்ளன.

## <u>விவசாயத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல்</u>

- ஆண்டிற்குள் 225 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் 13 குறு வீடியோச் செய்திகள் என்பன ஒளிபரப்பப்பட்டதுடன் நவீன விவசாயத் தொழில்நுட்பத்தை விவசாய மக்களுக்கும் மற்றும் ஏனைய உரிய தரப்பினர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக Youtube குறு வீடியோக்கள் 281 இணையத்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டது. ஆண்டிற்குள் 2,509 வானொலி நிகழ்ச்சிகளும் மற்றும் 756 குறு நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டன.

- 259, 394 புதிய புத்தகப் பிரதிகள் 78,000 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 1280 விவசாயம் சார் போஸ்டர்கள் என்பன அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளதுடன் விவசாய வெளியீடுகளின் விற்பனையின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் ரூ 389,989 ஆகும்.

- கன்னொறுவை மற்றும் படஅத விவசாயத் பூந் தோட்டங்களுக்கு உள்நாட்டுப் பார்வையாளர்கள் 81,965 பேர் மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் 422 பேரின் வருகை ஊடாக ஈட்டிக் கொள்ளப்பட்ட வருமானம் ரூ. 7.24 மில்லியன்கள் ஆகும்.

- விவசாயத் திணைக்களத்தின் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 16 நடாத்தப்பட்டன.

- மண் பரிசோதனை அறிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு படிமுறை I மற்றும் II பீடைநாசினிகளைப் பதிவு செய்தல், விதை சந்தைக் கட்டமைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவம், விவசாயக் கல்லூரி முகாமைத்துவக்

கட்டமைப்பு I மற்றும் II படிமுறைகள், நிதித் தரவுகள் கட்டமைப்பு மற்றும் தாவர மரபணு வளங்கள் MIS படிமுறை I அபிவிருத்தி செய்யப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்டது.

- 1920 விவசாய ஆலோசனைச் சேவையின் ஊடாக 60,327 பிரச்சினைகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டன.
- தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான தரப்பினர்களுக்கு சரியான நம்பகரமான விவசாயத் தகவல்களை துரிதமாகப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் என்பவற்றிற்காக விவசாயத் தகவல்கள் அலகு ஒன்று (AgIU) தாபிக்கப்பட்டது.
- பல்வேறு ஊடகங்களில் (புத்தகங்கள், பிரசுரங்கள், சஞ்சிகைகள், போஸ்டர்கள், கடிதங்கள், இணையத்தளக் கடிதங்கள், வீடியோ நிகழ்ச்சித் திட்டங்கள், செவிப்புல நிகழ்ச்சித் திட்டங்கள்) பயிர்களின் தகவல்களை உள்ளடக்கிய 'விவசாய ஈ - நூலகம்" தேடும் வசதியுடனான இணையத்தள மேடை ஒன்றாக அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளது.
- 2022 தேசிய வாசிப்பு மாதத்தில் 'பசுமை வெளி" பரிசு வழங்கும் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இளைஞர்கள் மத்தியில் விவசாயத்தினை மேம்படுத்துவதற்காக 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- 2022 தேசிய பயனுறுதிகள் விருது வழங்கும் வைபவத்தில் படஅத விவசாயத் தொழில்நுட்பப் பூங்காவிற்கு பாராட்டுச் சான்றிதழ் ஒன்று கிடைக்கப் பெற்றது.
- Best.wb.lk.domin இணையத்தளத்தின் ஊடாக நடாத்தப்படும் 2022 ஆம் ஆண்டிற்காக சிறந்த இணையத் தளத்தைத் தெரிவு செய்யும் போட்டியில் திறமைச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திற்கு ஆற்றல் கிடைத்தது.
- 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற தேசிய பயனுறுதிகள் விருது வழங்கும் வைபவத்தில் விவசாய வானொலிச் சேவையின் கொழும்பு அலகிற்கு பாராட்டுச் சான்றிதழ் ஒன்று கிடைக்கப் பெற்றது.

## விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி

| 90. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான விவசாயத் தென் –தெற்கு ஒத்துழைப்பு தொடர்பான கருத்தரங்கு | 01 | 20.07.2022<br>26.07.2022 | | | நிகழ்நிலை | விவசாயத் தென் –தெற்கு ஒத்துழைப்பு தொடர்பான அறிவு |
| 91. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான உயிர் திணிவு வலுச்சக்தியினை விருத்தி செய்தல் மற்றும் பயன்பாடு தொடர்பான கருத்தரங்கு | 01 | 21.07.2022<br>18.08.2022 | | | நிகழ்நிலை | உயிர் திணிவு வலுச்சக்தியினை விருத்தி செய்தல் மற்றும் பயன்பாடு தொடர்பான அறிவு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 92. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வெப்பவலய விவசாயத்தின் நவீன தொழிநுட்பம் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 01 | 11.08.2022<br>31.08.2022 | | | நிகழ்நிலை | வெப்பவலய விவசாயத்தின் நவீன தொழிநுட்பம் தொடர்பான அறிவு |
| 93. கரையோரம் மற்றும் வீதி (Belt & road) ஆரம்ப நாடுகளின் பெண்களுக்கு உணவாக உட்கொள்ளக்கூடிய காளான் பயிர்ச்செய்கைத் தொழிநுட்பம் தொடர்பான செயலமர்வு | 02 | 18.08.2022<br>07.09.2022 | | | நிகழ்நிலை | உணவாக உட்கொள்ளக்கூடிய காளான் பயிர்ச்செய்கைத் தொழிநுட்பம் தொடர்பான அறிவு |
| 94. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வெப்பவலயத் தாவரங்களின் இணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 01 | 11.08.2022<br>31.08.2022 | | | நிகழ்நிலை | வெப்பவலயத் தாவரங்களின் இணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பான அறிவு |
| 95. SCO நவீன விவசாய அபிவிருத்தி வட்ட மேசை | 01 | 15.09.2022 | | | நிகழ்நிலை | நவீன விவசாய அபிவிருத்தி தொடர்பான அறிவினைப் பரிமாறிக் கொள்ளல் |
| 96. கிராமிய சுற்றுலாக் கைத்தொழிலுக்கான புதிய கருத்திட்ட மாதிரிகள் தொடர்பான செயலமர்வு | 02 | 12.10.2022<br>14.10.2022 | | | நிகழ்நிலை | கிராமிய சுற்றுலாக் கைத்தொழிலுக்கான புதிய கருத்திட்ட மாதிரிகள் தொடர்பான அறிவு |
| 97. வனங்கள் மற்றும் இயற்கை வளங்களை நிலையான வகையில் பயன்படுத்தல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை உள்நாட்டு ரீதியில் வலுப்படுத்தல். | 02 | 31.10.2022<br>02.12.2022 | | | நிகழ்நிலை | . வனங்கள் மற்றும் இயற்கை வளங்களை நிலையான வகையில் பயன்படுத்தல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை உள்நாட்டு ரீதியில் வலுப்படுத்தல் தொடர்பான அறிவினைப் பரிமாறிக் கொள்ளல் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 98. விளைதிறன் மற்றும் தரம் என்பவற்றை விருத்தி செய்வதற்கான தாவர நோய்கள் மற்றும் பீடை முகாமைத்துவம் தொடர்பான புதிய எண்ணக்கரு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 03 | 11.10.2022<br>14.10.2022 | | | நிகழ்நிலை | தாவர நோய்கள் மற்றும் பீடை முகாமைத்துவம் தொடர்பான புதிய எண்ணக்கரு பற்றிய அறிவு |
| 99. நுண்ணுயிர் உயிரியல் பீடை கொல்லிகள் தயாரிப்பு தொடர்பான செயலமர்வு | 01 | 24.10.2022<br>31.10.2022 | | | நிகழ்நிலை | நுண்ணுயிர் உயிரியல் பீடை கொல்லிகள் தயாரிப்பு தொடர்பான அறிவு |
| 100. BRI நாடுகளுக்கான விவசாயத் தகவல்கள் சேவை முகாமைத்துவம் தொடர்பான TA/CHI/S/422 கருத்தரங்கு | 03 | 12.10.2022<br>25.10.2022 | | | நிகழ்நிலை | விவசாயத் தகவல்கள் சேவை முகாமைத்துவம் தொடர்பான அறிவு |
| 101. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான ஏற்றுமதி செய்யப்படக்கூடிய விவசாய உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான TA/CHI/S/442 கருத்தரங்கு | 09 | 13.10.2022<br>02.11.2022 | | | நிகழ்நிலை | ஏற்றுமதி செய்யக்கூடிய விவசாய உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான அறிவு |
| 102. பசுமைச் சுற்றாடல் மற்றும் பாதுகாப்பான தானியங்களைக் களஞ்சியப்படுத்தும் தொழிநுட்பம் தொடர்பான TA/CHI/S/444 பயிற்சிப் பாடநெறி | 01 | 18.10.2022<br>27.10.2022 | | | நிகழ்நிலை | பசுமைச் சுற்றாடல் மற்றும் பாதுகாப்பான தானியங்களைக் களஞ்சியப்படுத்தும் தொழிநுட்பம் தொடர்பான அறிவு |
| 103. கரையோரம் மற்றும் வீதி (Belt & road) ஆரம்ப நாடுகளுக்கான உணவுப் பாதுகாப்பு தொடர்பான TA/CHI/S/445 கருத்தரங்கு | 02 | 18.10.2022<br>07.11.2022 | | | நிகழ்நிலை | உணவுப் பாதுகாப்பு முகாடைத்துவம் தொடர்பான அறிவு |
| 104. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான TA/CHI/S/446 கருத்தரங்கு | 05 | 18.10.2022<br>07.11.2022 | | | நிகழ்நிலை | தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 105. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான மண் மற்றும் உரங்கள் விரிவான முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு தொடர்பான TA/CHI/S/457 கருத்தரங்கு | 05 | 24.10.2022 06.11.2022 | | | நிகழ்நிலை | மண் மற்றும் உரங்கள் விரிவான முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு தொடர்பான அறிவு |
| 106. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான பயிர் விதை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான TA/CHI/S/396 கருத்தரங்கு | 01 | 10.10.2022 23.10.2022 | | | நிகழ்நிலை | பயிர் விதை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அறிவு |
| 107. கரையோரம் மற்றும் வீதி (Belt & road) ஆரம்ப நாடுகளுக்கான விவசாய உற்பத்திகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் வியாபாரம் தொடர்பான TA/CHI/S/397 கருத்தரங்கு | 04 | 10.10.2022 – 30.10.2022 | | | நிகழ்நிலை | விவசாய உற்பத்திகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் வியாபாரம் தொடர்பான அறிவு |
| 108. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான பண்ணை உற்பத்திப் பாதுகாப்புத் தொழிநுட்பம் தொடர்பான TA/CHI/S/410 கருத்தரங்கு | 01 | 11.10.2022 – 31.10.2022 | | | நிகழ்நிலை | பண்ணை உற்பத்திப் பாதுகாப்புத் தொழிநுட்பம் தொடர்பான அறிவு |
| 109. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான சூழலுக்கு சாதகமான உர உற்பத்தி, பயன்பாடு மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான TA/CHI/S/413 கருத்தரங்கு | 07 | 11.10.2022 – 31.10.2022 | | | நிகழ்நிலை | சூழலுக்கு சாதகமான உர உற்பத்தி, பயன்பாடு மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவு |
| 110. கரையோரம் மற்றும் வீதி (Belt & road) ஆரம்ப நாடுகளுக்கான சூழலுக்கு சாதகமான மீள் சுழற்சியாக்கம் தொடர்பான TA/CHI/S/414 கருத்தரங்கு | 01 | 11.10.2022 – 31.10.2022 | | | நிகழ்நிலை | சூழலுக்கு சாதகமான மீள் சுழற்சியாக்கம் தொடர்பான அறிவு |
| 111.நிலையான விவசாய அபிவிருத்தி மற்றும் ஸ்மார்ட் விவசாயம் தொடர்பான TA/CHI/S/415 கருத்தரங்கு | 10 | 11.10.2022 – 31.10.2022 | | | நிகழ்நிலை | .நிலையான விவசாய அபிவிருத்தி மற்றும் ஸ்மார்ட் விவசாயம் தொடர்பான அறிவு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 112. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வெப்பவலய உயிரியல் வளங்களின் அபிவிருத்தி மற்றும் பாவனை தொடர்பான TA/CHI/S/416 பயிற்சிப் பாடநெறி | 01 | 11.10.2022 – 31.10.2022 | | | நிகழ்நிலை | வெப்பவலய உயிரியல் வளங்களின் அபிவிருத்தி மற்றும் பாவனை தொடர்பான அறிவு |
| 113. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான மொத்த விவசாயக் கைத்தொழில் சங்கிலியினைக் கட்டியெழுப்புதல் தொடர்பான TA/CHI/S/458 கருத்தரங்கு | 07 | 24.10.2022 - 13.11.2022 | | | நிகழ்நிலை | மொத்த விவசாயக் கைத்தொழில் சங்கிலியினைக் கட்டியெழுப்புதல் தொடர்பான அறிவு |
| 114. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விவசாய உற்பத்தி சுற்றாடல் ஒழுங்கமைப்பு தொடர்பான TA/CHI/S/460 கருத்தரங்கு | 02 | 25.10.2022 03.11.2022 | | | நிகழ்நிலை | உற்பத்தி சுற்றாடல் ஒழுங்கமைப்பு தொடர்பான அறிவு |
| 115. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்திகளைத் தயாரித்தல் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான தாபனக் கொள்ளளவினைக் கட்டியெழுப்புதல் தொடர்பான TA/CHI/S/465 கருத்தரங்கு | 03 | 26.10.2022 15.11.2022 | | | நிகழ்நிலை | விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்திகளைத் தயாரித்தல் மற்றும் தாபன ரீதியான கொள்ளளவினைக் கட்டியெழுப்புதல் |
| 116. சீனாவின் FAO இலங்கை தென் –தெற்கு ஒத்துழைப்புக் கருத்திட்டத்தின் கீழ் வெப்ப வலய பழங்களின் உற்பத்தித் தொழிநுட்பம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 01 | 10.10.2022 14.10.2022 | | | நிகழ்நிலை | வெப்ப வலய பழங்களின் உற்பத்தித் தொழிநுட்பம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான அறிவு |
| 117. இலங்கைக்கான வறுமை ஒழிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு | 02 | 11.10.2022 24.10.2022 | | | நிகழ்நிலை | வறுமை ஒழிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான அறிவு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 118. கொரியாவின் ஸ்மார்ட் பண்ணையின் நிகழ் காலம் மற்றும் எதிர்காலம் | 03 | 25.10.2022<br>26.10.2022 | | | நிகழ்நிலை | ஸ்மார்ட் பண்ணை தொடர்பான அறிவு |
| 119. கரையோரம் மற்றும் வீதி (Belt & road) ஆரம்ப நாடுகளுக்கான விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு | 01 | 09.11.2022<br>29.11.2022 | | | நிகழ்நிலை | விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான அறிவு |
| 120. நிலையான விவசாய இயந்திரமயமாக்கத்திற்கான நிலையத்தின் நிருவாக சபையின் 18 ஆம் கூட்டத்தொடர் | 01 | 09.12.2022 | | | நிகழ்நிலை | நிலையான விவசாய இயந்திரமயமாக்கம் தொடர்பான அறிவினைப் பரிமாறிக்கொள்ளல் |
| 121. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான சுற்றாடல் விவசாயப் பெறுமதிகள் சங்கிலியினை விருத்தி செய்தல் தொடர்பான கருத்தரங்கு | 01 | 01.11.2022<br>10.11.2022 | | | நிகழ்நிலை | சுற்றாடல் விவசாயப் பெறுமதிகள் சங்கிலியினை விருத்தி செய்தல் தொடர்பான அறிவு |
| 122. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான பழங்கள் மற்றும் காய்கறிகள் பின் அறுவடைக் கையாளுகைகள் மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் தொடர்பில் விருத்தி அடைந்து வரும் தொழிநுட்பம் தொடர்பான கருத்தரங்கு | 01 | 04.11.2022<br>24.11.2022 | | | நிகழ்நிலை | பழங்கள் மற்றும் காய்கறிகள் பின் அறுவடைக் கையாளுகைகள் மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் தொடர்பில் விருத்தி அடைந்து வரும் தொழிநுட்பம் தொடர்பான அறிவு |
| 123. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விவசாய உயிரியல் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு | 03 | 07.11.2022<br>06.12.2022 | | | நிகழ்நிலை | விவசாய உயிரியல் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தல் தொடர்பான அறிவு |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 124. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான காலநிலை மாற்றங்கள் மற்றும் விவசாய நிலையான அபிவிருத்தி என்பன தொடர்பான கருத்தரங்கு | 01 | 16.11.2022<br>06.12.2022 | | | நிகழ்நிலை | காலநிலை மாற்றங்கள் மற்றும் விவசாய நிலையான அபிவிருத்தி என்பன தொடர்பான அறிவு |
| 125. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான ஏற்றுமதி செய்ய முடியுமான விவசாய உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் என்பன தொடர்பான கருத்தரங்கு | 01 | 10.11.2022<br>23.11.2022 | | | நிகழ்நிலை | ஏற்றுமதி செய்ய முடியுமான விவசாய உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் என்பன தொடர்பான அறிவு |
| **உள்நாட்டு பட்டப் பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | |
| 126. பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான முதுமானிப் பட்டம் | 01 | .2022.03<br>05<br>தொடக்கம்<br>.2023.03<br>04 | 122.50 | - | உள்நாடு | பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான அறிவு |
| **ஏனைய உள்நாட்டுப் பயிற்சிகள்** | | | | | | |
| 127. ஒழுக்காற்றுச் செயலாற்றுகை நடைமுறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 60 | 2022.02. 24/25 | 47.30 | | உள்நாடு | ஒழுக்காற்று தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆளணி ஒன்றினைத் தோற்றுவித்தல் |
| 128. தோட்ட வடிவமைப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – பேராதெனிய தாவரவியல் பூங்கா | 09 | 2022.03.<br>08/10/11/<br>14/15 | | | உள்நாடு | தோட்ட வடிவமைப்பு தொடர்பில் தொழிலாளிகள் அலுவலர் குழாத்தின் அறிவினை விருத்தி செய்தல் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 129. விளைதிறன் எண்ணக்கரு தொடர்பான சான்றிதழ் பாடநெறி – தேசிய பயனுறுதிகள் செயலகம் | 06 | 2022.03. 21/22/23/ 25/31 | 48.00 | | உள்நாடு | உத்தியோகத்தர்களின் பயனுறுதி தொடர்பான அறிவினை விருத்தி செய்தல் |
| 130. தொடர்பாடல் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (கனிஷ்ட அலுவலர் குழாத்திற்காக) | 52 | 2022.03. 28/29 | 80.50 | | உள்நாடு | சிறந்த தொடர்பாடல் திறன்களைக் கொண்ட ஆளணி ஒன்றினைத் தோற்றுவித்தல் |
| 131. அலுவலகம் ஒன்றில் பயன்படுத்தப்படும் ஆரம்ப ஏடுகள் மற்றும் ஆவணங்கள் / கடிதங்கள் எழுதுதல் / கடிதங்களைக் கோப்பிடுதல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தாபனம் 03 கிளை) | 09 | 2022.08.03 | | | உள்நாடு | சரியான முறையில் கடமையினை நிறைவேற்றுவதற்காக அறிவு பூர்வமான உத்தியோகத்தர்களைத் தோற்றுவித்தல். |
| 132. தொழிலாளிகள் அலுவலர் குழாத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – அங்குணகொலபெலெஸ்ஸ | 47 | 2022.09. 26/27/28/ 29/30, 2022.10. 01/02 | 343.60 | | உள்நாடு | சேவையில் நிரந்தமாக்குவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்தல். |
| 133. சாரதிகள் அலுவலர் குழாத்தின் தொழில்சார் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 56 | 2022.12. 05/06 | 369.10 | | உள்நாடு | பாதுகாப்பான பயண முடிவிற்காக சாரதிகள் அலுவலர் குழாத்திற்குப் பயிற்சியளித்தல். |
| 134. சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்கள், ஸ்டுவேர்ட் மற்றும் சமையற்காரர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 24 | 2022.11. 28/29 | 127.97 | | உள்நாடு | வரவேற்றல், உபசரிப்புச் சேவைகளை வழங்குவது எவ்வாறு என்பன தொடர்பில் மேற்படி அலுவலர் குழாத்தினை அறிவூட்டல். |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 135. கணினி அறிவினை விருத்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி I) | 18 | 2022.11. 30 | | | உள்நாடு | உத்தியோகத்தர்களின் கணினி அறிவினை விருத்தி செய்தல் |
| 136. கணினி அறிவினை விருத்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி II) | 09 | 2022.12. 02 | | | உள்நாடு | உத்தியோகத்தர்களின் கணினி அறிவினை விருத்தி செய்தல் |
| 137. கணினி அறிவினை விருத்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி III) | 09 | 2022.11. 13 | | | உள்நாடு | உத்தியோகத்தர்களின் கணினி அறிவினை விருத்தி செய்தல் |
| **ஏனைய உள்நாட்டுப் பயிற்சிகள் (நிகழ்நிலை)** | | | | | | |
| 138. அலுவலக வழிமுறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு - SDFL நிறுவனம் | 09 | 2022.05. 09/18 | 67.50 | | உள்நாடு | கடமையினை சரியாவும் மற்றும் முறையாகவும் நிறைவேற்றுவதற்கான அறிவினை வழங்குதல். |
| 139. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி (தமிழ் மொழி மூலம்) கடமையினை சரியாகவும் மற்றும் முறையாகவும் நிறைவேற்றுவதற்கான அறிவினை வழங்குதல். | 24 | 2022.04.26/27 | | | உள்நாடு | அரச சேவை தொடர்பில் அறிவினையும் மற்றும் புரிந்துணர்வினையும் கொண்ட உத்தியோகத்தர்களைத் தோற்றுவித்தல் |
| 140. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி (சிங்கள மொழி மூலம்) | 140 | 2022.04. 26/27 | | | உள்நாடு | அரச சேவை தொடர்பில் அறிவினையும் மற்றும் புரிந்துணர்வினையும் கொண்ட உத்தியோகத்தர்களைத் தோற்றுவித்தல் |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 141. பெறுகை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (சிங்கள மொழி மூலம்) | 143 | 2022.05. 18 | | | உள்நாடு | வெளிப்படைத்தன்மையுடன் பெறுகை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல். |
| 142. பெறுகை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 10 | 2022.05. 19 | | | உள்நாடு | வெளிப்படைத்தன்மையுடன் பெறுகை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல். |
| 143. அலுவலக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (சிங்கள மொழி மூலம்) | 103 | 2022.06. 06/07 | | | உள்நாடு | எளிமையான, வினைத்திறனுள்ள மற்றும் சிறந்த வேலைச் சூழல் ஒன்றினை உருவாக்குதல் |
| 144. பிரத்தியேக கோப்பிடல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (சிங்கள மொழி மூலம்) | 103 | 2022.09. 01/02 | | | உள்நாடு | பிரத்தியேக கோப்பிடல் தொடர்பான அறிவினை விருத்தி செய்து சரியான முறையில் பிரத்தியேக கோப்புக்களைப் பேணி வருதல். |
| 145. பிரத்தியேக கோப்பிடல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 40 | 2022.12. 05/06/08/ 09 (நாள் ஒன்றிற்கு அரைநாள் வீதம்) | 12.00 | | உள்நாடு | பிரத்தியேக கோப்பிடல் தொடர்பான அறிவினை விருத்தி செய்து சரியான முறையில் பிரத்தியேக கோப்புக்களைப் பேணி வருதல். |
| 146. ஓய்வூதிய நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (சிங்கள மொழி மூலம்) | 107 | 2022.09. 20 | | | உள்நாடு | ஓய்வூதியம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல். |

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலஎல்லை | மொத்த முதலீடு (ரூ'000) | | திட்டத்தின் தன்மை (வெளிநாடு/ உள்நாடு) | வெளியீடு/ பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 147. Live CPD Course on Insurance, Bonds & Guarantees in Construction Industry – IESL நிறுவனம் | 01 | 2022.09. 14 இலிருந்து 06 புதன் கிழமைகள் | 14.30 | | உள்நாடு | காப்புறுதி ,பிணைமுறி மற்றும் பிணை தொடர்பில் பொறியியலாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அறிவு மற்றும் விளக்கம் என்பவற்றை திணைக்களத்தின் பொறியியல் பிரிவிற்கு வழங்குதல். |
| 148. பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி (பெறுகைக் குழுவில் உறுப்புரிமை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர்கள்) online- SLIDA | 71 | 2022.11. 03/04/10/ 11/25 | 122.25 | | உள்நாடு | வெளிப்படைத்தன்மையுடன் பெறுகை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல் தொடர்பில் பெறுகைக் குழு உத்தியோகத்தர்களை அறிவூட்டல். |
| 149. ஓய்வூதிய நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 60 | 2022.11. 28/29 (மே) | 6.00 | | உள்நாடு | ஓய்வூதியம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல். |
| 150. ஒழுக்காற்றுச் செயலாற்றுகை நடைமுறைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 54 | 2022.12. 06/08/15/ 16 (நாள் ஒன்றிற்கு அரைநாள் வீதம்) | 9.60 | | உள்நாடு | ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆளணி ஒன்றினைத் தோற்றுவித்தல். |

கணக்கீட்டு உத்தியோகத்தர்,
விவசாயத் திணைக்களம்.

**விவசாயத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கை**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

தலைப்பு 285 - விவசாயத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் கூடிய 2022 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளக நிருவாகங்களைக் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானங்கள்,செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்றுக்கள் அற்றவை என நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் அற்றவை என உறுதிப்படுத்தல் ஒன்றாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பாதிப்புச் செலுத்துவதன் காரணமாக அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், அதன் அளவுசார் தன்மை மேற்படி நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிபாலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால் மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார் பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணத்தினால் ஆகும்.
- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்**

**1.6.1 முற்பணக் கொடுப்பனவுகள்**

நிதிச் செயலாற்றுகைக் கூற்றிற்கு அமைய (ACA-F) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முற்பண வரவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூ. 1,348,571,573 தொகை மற்றும் ரூ. 1,294,318,401 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் குறிப்புக்களுக்கு அமைய முற்பண வரவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் முறையே ரூ.1,349,780,930 தொகை மற்றும் ரூ. 1,294,573,401 தொகை ஆகையினல் முற்பண வரவுகள் ரூ. 1,209,357 தொகையினாலும் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூ. 255,000 தொகையினாலும் குறைவாகக் கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தன.

**1.6.2 நிதி அல்லாத சொத்துக்கள்**

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று அடையாளம் காணப்பட்டு இருந்த வாகனங்களின் பெறுமதி ரூ. 1,600,904,975 தொகை எனினும், திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைய அது ரூ. 1,605,524,742 தொகை ஆக இருந்தமையினால் ரூ. 4,619,766 தொகை வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் ரூ. 7,119,325,465 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டு இருந்த பெறுமதிக்கு அமைய அது ரூ. 1,809,182,290 தொகை ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய மொத்தம் ரூ. 5,310,143,175 தொகை வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் 1248 சந்தர்ப்பங்கள் மதிப்பீடு செய்து கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை

(இ) நிதிக் கூற்றுக்கள் (ஏசீஏ-6) இற்கு அமைய நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணிகளின் பெறுமதி ரூ. 17,849,002,464 ஆகக் காணப்பட்ட போதிலும், பௌதீக ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டு இருந்த பெறுமதிக்கு அமைய அது ரூ. 11,664,574,116 தொகை ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய மொத்தம் ரூ. 6,184,428,348 தொகை வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் திணைக்களத்திற்கு உரித்தான 372 காணிகள் விலை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

### 1.6.3 வணிக முற்பணக் கணக்கு

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) பெல்வெஹர பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய ரூ. 791,608 தொகை படுகடன் மீதியினை ரூ. 79,168 எனக் கணக்கில் சேர்க்கப்பட்டமையின் காரணமாக படுகடன் மீதி ரூ. 712,440 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) படஅத பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு, ஹம்பாந்தோட்டை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 150,000 தொகை படுகடன் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) தெலிஜ்ஜவில பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய படுகடன் மீதியில் ஒப்பந்த விதை நிகழ்ச்சித்திட்டத்திற்கு (201 கணக்கிற்கு) உரித்தான ரூ. 128,116 தொகை படுகடன் மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டு இருந்தது.

(ஈ) மீபிலிமான விதை உருளைக்கிழங்கு உற்பத்திப் பண்ணைக்கு உரித்தான 05 மோட்டார் வாகனங்களின் பெறுமதியினை விலை மதிப்பீடு செய்து தேய்மானம் கணிப்பிடப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) பொலன்னறுவை விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கழித்து ஒதுக்கப்பட்டு இருந்த பொறிகளுக்கு உரிய திரண்ட தேய்மானத்தின் பெறுமதி ரூ. 4,638,657 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அது ரூ. 3,478,042 தொகை என ரூ. 1,160,615 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஊ) உடரெதெல்ல விதை உற்பத்திப் பண்ணையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் இருப்புக்களின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ஏனைய நுகர்வோர் பண்டங்களின் இருப்புக்களின் பெறுமதி ரூ. 968,093 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூ. 1,816,959 எனக் குறிப்பிடப்பட்டு இருந்தமையினால் ஏனைய நுகர்வோர் பண்டங்களின் இருப்பு ரூ. 848,866 தொகை அதிகமாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(எ) விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திக் கணக்கின் கீழ் அடையாளம் காணப்பட்டு இருந்த ரூ. 57,500,314 தொகை பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு ஒன்று மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் பண்ணை முற்பணக் கணக்கிற்கு மாற்றி மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளாது செலவின் மீது ரூ. 1,437,507 தொகை மீதி ஒன்று பண்ணை முற்பணக் கணக்கில் ஆண்டின் தேய்மானமாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(ஏ). மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கழித்து ஒதுக்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கு உரித்தான ரூ. 24,364,021 தொகை திரண்ட தேய்மானம், தேய்மான ஒதுக்கு நிதியக் கணக்கினைப் பற்று வைத்து திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும் எனினும், அதற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

### 1.6.4 கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து நிறைவு செய்யும் முற்பணக் கணக்கு

நிதி ஒழுங்குவிதி 518 (3) இன் பிரகாரம் முற்பணப் பணியினை மூடி வைத்ததன் பின்னர் அடுத்து வரும் வருடத்தில் கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் எனினும் விவசாயத் திணைக்களத்தின் கீழ் நிலவிய 05 வணிக முற்பண நடவடிக்கைகளை 1991 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதியில் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றிற்கு அமைய மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறு வணிக முற்பணக் கணக்கினை மூடி வைத்து 20 இற்கும் 31 இற்கும் இடைப்பட்ட காலம் சென்றிருந்த போதிலும், கலைத்து விடும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கணக்குகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் கைச்சாத்திடல்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) 2017 ஏப்பிறல் 27 ஆம் திகதிய மற்றும் 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்திக்கு ஒத்தியங்காத வகையில் 02 செலவு விடயங்களில் ஒதுக்கீடுகளைத் தாண்டி ரூ. 871,828 தொகை பொறுப்புக்களில் கைச்சாத்திடப்பட்டு இருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பு (iv) இற்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூ. 7,251,091 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட SA 92 ஆவணத்திற்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி ரூ. 15,098,673 ஆகக் காணப்பட்டது.

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்தியங்காமை**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள் தொகுதி 1 இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பந்திக்குப் புறம்பான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு திணைக்களத்தின் 7 அலகுகளில் இணைக்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர்கள் 183 பேர் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒரே தாபனத்தில் சேவையில் ஈடுபட்டு வந்தனர்.

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நி.ஒ. 753 (2) இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது கன்னோருவை தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், ரூ. 1,900,734 தொகை பெறுமதியான இரசாயனகூட மேசைகளைக் கொள்வனவு செய்யும் போது பொருட்கள் கிடைக்கப்பெற்று இருக்காத வேளையில், களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் பொருட்கள் கிடைக்கப் பெற்றதாக போலியாகக் குறிப்பிட்டு பொது 219 வழங்கப்பட்டு இருந்தது. 2023 மார்ச் 15 ஆம் திகதி ஆகும் போதும் உரிய பொருட்கள் கிடைக்கப்பெற்று இருக்கவில்லை என்பதுடன் அதற்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட ரூ. 1,900,734 தொகை பெறுமதியான காசோலை ஒன்று 75 நாட்களாக விரிவாக்கல் கணக்குப் பிரிவில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

(ஆ) 03 அரச விதை உருளைக் கிழங்குப் பண்ணைகளுக்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த 03 Front end loaders களுக்காக 03 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 9,449, 925 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு உரிய காசோலைகள் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி ஆகும் போது அனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் போலியான பொது 219 சான்றிதழின் மீது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த உரிய உபகரணங்கள் 2023 மார்ச் 30 ஆம் திகதி ஆகும் போதும் பண்ணைகளுக்கு கிடைக்கப்பெற்று இருக்கவில்லை.

### 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தாட்சிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விவசாயத் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்கான வினைத்திறனுள்ள உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்து பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் வினைத்திறன் தொடர்பில் அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்புக்களை வினைத்திறனாக பேணி வருவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு முன்வைத்தல் வேண்டும் எனினும், அவ்வாறான ஒரு மீளாய்வினை மேற்கொண்டதாக கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

### 2.5 வங்கிக் கணக்குகளைக் கண்காணித்தல்

திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு உரிய வகையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் விரிவாக்கல் நடவடிக்கைகளுக்காக எழுதப்பட்ட ரூ. 10,309,346 பெறுமதியான 26 காசோலைகள் உரிய பணம் பெறுவனருக்கு வழங்கப்படாமல் பரீட்சிக்கப்பட்ட தினமாகிய 2023 மார்ச் 15 ஆம் திகதி ஆகும் போதும் கணக்குகள் பிரிவில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

விதை உற்பத்திப் பண்ணையின் பிரதான நோக்கம் தரமான விதை உற்பத்தி எனினும், முளைத்தல் வீதம் நூற்றிற்கு 50 -75 வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 50% குறைத்தும் மற்றும் முளைத்தல் வீதம் நூற்றிற்கு 25 - 50 வரையான விதைகளை அனுமதிக்கப்பட்ட விலையில் இருந்து நூற்றிற்கு 75% குறைத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தது.

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினைப் பெற்றுக் கொள்ளாமை

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு தேவையான விதைகளை உரிய காலப் பகுதிக்குள் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் 04 போகங்களில் 16 சந்தர்ப்பங்களில் 07 பயிர் வகைகளுக்கு உரிய வகையில் எதிர்பார்க்கப்பட்ட விதை 4810 கி.கிராம் தொகையினை உற்பத்தி செய்ய முடியாமல் போயுள்ளது.

(ஆ) மஹாஇலுப்பல்லம விதை உற்பத்திப் பண்ணையில் 2019 ஆம் ஆண்டில் சிறு போகம் தொடக்கம் 2022 சிறு போகம் வரையான 07 போகங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த விதை நெல் உற்பத்தி 3,067,620 கி.கிராம் ஆகக் காணப்பட்ட போதிலும், மேற்படி காலப்பகுதிக்குள் ரூ. 86,001,891 தொகையினை செலவிட்டு விதை நெல் 1,400,265 கி.கிராம் எனும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 46 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறே மேற்படி காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட மொத்த மேலதிக உணவுப் பயிர்களின் விதை உற்பத்தி 51,040 கி.கிராம் எனினும், ரூ. 23,875,563 தொகையினை செலவழித்து மேலதிக உணவுப் பயிர்களின் விதை 10,823 கி.கிராம் எனும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 21 சதவீதம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு இருந்தது.

### 3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் வருடாந்த நகல் செயலாற்றுகை அறிக்கை ஒன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

### 3.4 சொத்து முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) 1974 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 224 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களுக்கு உரிய 2191 ஹெக்ரயார் நிலப் பரப்பு முறையாக எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான 10 நிறுவனங்களில் நிலவும் மொத்தம் ரூ. 116,979,640 தொகை பெறுமதியான 261 இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 01 தொடக்கம் 07 வருடங்கள் வரையான காலப்பகுதி தொடக்கம் பயன்படுத்தாது செயலற்று மற்றும் குறைவான பயன்பாட்டில் இருந்தது.

(இ) விவசாயத் திணைக்களத்திற்கு பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெற்று இருந்த 09 நிறுவனங்களில் நிலவும் 23 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 46 அலகுகளுக்கு உரிய கைவினை டிரக்டர்கள் மற்றும் 105 டிரக்டர்கள் என்பன 2022 நவெம்பர் 30 ஆம் திகதி ஆகும் போதும் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் 72 வாகனங்கள் மற்றும் 183 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றிற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) திணைக்களத்தின் 11 அலகுகளுக்கு உரிய கைவினை டிரக்டர்கள், டிரக்டர்கள் மற்றும் 40 இலை அரைக்கும் இயந்திரங்கள் என்பன கழித்து ஒதுக்குவதற்காக அனுப்பப்பட்டு இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு ஆகும் போதும் அதன் கழித்து ஒதுக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தின் 72 அலகுகளுக்கு உரிய வகையில் 396 அரச இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் பலனற்றுக் காணப்பட்டன.

(எ) படைப் புழுக் கருத்திட்ட ஆய்வு மற்றும் அது தொடர்பாக கண்டறிவதற்காக விவசாய இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ. 6,395,847 தொகையினைச் செலுத்தி 2019 டிசம்பர் 20 ஆம் திகதி ட்ரோனர் கெமராக் கட்டமைப்பு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. எனினும் இந்தக் கெமராக் கட்டமைப்பினால் எதிர்பார்க்கப்பட்ட பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக ட்ரோன் மென்பொருளினை தாபிப்பதற்காக தேவையான டெஸ்க்டொப் கணினி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு இயலாமல் சென்றமையின் காரணமாக இந்தக் கெமரா 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயனின்றிக் காணப்பட்டது.

### 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

நிதிக் கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த நிதி ஒழுங்குவிதி 104 இன் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது 1976 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவும் ரூ. 104,443,743 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கு உரிய 383 நிகழ்வுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

### 3.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1981 நவெம்பர் 02 ஆம் திகதிய மற்றும் 165/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கொழும்பு, கட்டுநாயக்க, திருகோணமலை, தலைமன்னார், காலி மற்றும் காங்கேசந்துறை துறைமுகங்களில் தாவரத் தடுப்புக்காப்புச் சேவை அலகு ஒன்று தாபிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைக்கு உரிய 6656 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் மூலம் வேறாக்கப்பட்டு இருந்த 1.5 ஏக்கர்களுக்கு உரிய 21 காணித் துண்டுகளை அத்துமீறிக் குடியேறியவர்கள் பயன்படுத்தி உள்ளதுடன் அதில் 2 துண்டுகளில் நிலையான நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

(இ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணையில் 11 சிறிய அளவிலான குளங்களில் சேற்று மண்ணை அகற்றும் தேவைப்பாடு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அடையாளம் காணப்பட்டு 04 வருட காலம் கழிந்து இருந்த போதிலும், இந்தக் குளங்களில் சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) குண்டசாலை அரச விதை உற்பத்திப் பண்ணையில் காய்கறிச் செய்கையின் வரிசைகளுக்கு இடையில் களைகளை ஒழிப்பதற்காக Kubota RK -80 வகை இரண்டு சக்கர டிரக்டர் வண்டிகளின் தேவைப்பாடு காணப்பட்ட போதிலும் தேவைப்பாட்டினை சரியாக அடையாளம் காணாது விவசாயத் திணைக்களத்தினால் Brown Yanmar வகையான இரண்டு இரட்டைச் சக்கர டிரக்டர் வண்டிகள் வழங்கப்பட்டு இருந்தன. அதற்கு அமைய காய்கறிச் செய்கையின் வரிசைகளுக்கு இடையில் களைகளை ஒழிப்பதற்காக இந்த இயந்திரங்கள் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டு பின்னர் மேற்படி இரண்டு டிரக்டர் வண்டிகளையும் தெலிஜ்ஜவில மற்றும் படஅத பண்ணைகளுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

(உ) மஹாஇலுப்பல்லம அரச விதை உற்பத்திப் பண்ணையில் சேதனப் பசளை உற்பத்திக்காக கடந்த வருடத்தின் டிசம்பர் மாதம் ரூ. 1,709,800 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 சொப்பர் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் 2023 சனவரி 12 ஆம் திகதி ஆகும் போதும் இந்த இயந்திரங்கள் சேதனப் பசளைத் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) மஹாஇலுப்பல்லம பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரித்தான 06 களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு இருந்த விதை நெல் 273508 கிலோ கிராம் தொகையில் விதை நெல் 239991 கிலோ கிராம் அளவாகிய மொத்த விதையின் அளவில் நூற்றிற்கு 88 வீதம் தகுதியற்ற விதைகள் என விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

(எ) திணைக்களத்தின் 54 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த கைவினை டிரக்டர்கள், டிரக்டர்கள் மற்றும் 139 இலை அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் 32 அலகுகளுக்கு இணைக்கப்பட்டு இருந்த 84 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

**4. மனித வள முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) விவசாயத் திணைக்களத்தின் 1050 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் உட்பட அனுமதிக்கப்பட்ட ஆளணி 12374 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் 658 பேர் உட்பட வெற்றிடங்கள் 2726 ஆகக் காணப்பட்டன.

(ஆ) விவசாயத் திணைக்களத்தின் 303 ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோப்புக்கள் வேலை பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் ஓய்வூதியம் செலுத்த முடியாமல் காணப்பட்டன.

எச்.ஏ.ஆனந்த
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்.